கடவுள் துணை.

செந்தமிழ்

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி-சஎ.] விக்ருதி-ஹு மாசி—பங்குனி-மீ [பகுதி. ச-ரு.

Vol. 47. February—April 1951 No. 4-5.

உள்ளுறை.

தமிழ்நாட்டு மூவேந்தர்:— } திரு. T. C. ஸ்ரீநிவாஸையங்கார் B.A, B.L, அவர்கள். ருஎ—சக

நாலடியார் இருவருரைத்திருத்தம்:— } திரு. சத்தியவாசேவரையரவர்கள். சஎ—எக

இயவர் என்போர் யாவர்:— } திரு. பண்டித. S. அருளம்பலம் அவர்கள். எஉ—எஅ

மதிப்புரை:— பத்திராசிரியர் எகூ—அ0

திருக்குறுங்குடி அழகியநம்பிபிள்ளைத்தமிழ் (குறிப்புரையுடன்):— } பத்திராசிரியர் 33—56

பத்திராசிரியர்—திரு. கி. இராமாநுஜையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ 4—8—0.

1952

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by T. K. Ramanuja Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

உ

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசுரங்கள் தமிழ்ச்சங்கப் பிரசுரங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

S. சிவஸ்வாமி,

மானேஜர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்

தொகுதி—சஎ.] விக்ருதி-ஹூ மாசி—பங்குனி மீ [பகுதி ச-ரு.

Vol. 47. February—April 1951 No. 4-5.

தமிழ்நாட்டு மூவேந்தர்

[உயர்திரு. T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A, B.L மதுரை.]

தமிழ்நாட்டு மூவேந்தராவார் வேங்கடமும் குமரியும் ஆகிய இவற்றின் இடைப்பட்ட தமிழ்நிலத்து அரசுபுரிந்த சேர சோழ பாண்டிய மன்னராவர்.

இவரைப் 'படைப்புக்காலந்தொட்டு மேம்பட்டு வருங்குடிகள்' என்பர் பரிமேலழகர்.

'போந்தை வேம்பே ஆர்என வரூஉம் - மாபெருந்தானையர்' என்று தொல்காப்பியர் கூறுதலால் தொல்காப்பியர்காலத்துக்கு முன்பே இவ்வரசர்மூவரும் பிரசித்திபெற்றிருந்தனர் என்று தெரிகிறது.

வான்மீகத்தும் பாரதத்தும் சேர சோழ பாண்டியர்களைப் பற்றிய செய்திகளும் அவர்நாட்டு அணியியல்களும் பேசப்பட்டுள்ளன. அன்றியும் பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் முதலிய தமிழ்நூல்களிலும் இவர் பெருமையெல்லாம் காணத்தகும்.

எட்டுத்தொகைநூல்களுள், பதிற்றுப்பத்து, சேரவேந்தர் பதின்மர்பெருமையைமட்டும் விரிப்பது. பரிபாடல், மதுரை வையை திருமால் செவ்வேள் பரங்குன்று சோலைமலை என்பவற்றை விஷயமாகக்கொண்டு இடையிடையே பாண்டியர்செய்தியையும்

புலப்படுத்திச்செல்வது. பத்துப்பாட்டு, சோழ பாண்டியர் பெருமையை விளக்கிச்செல்லும். ஒழிந்தவற்றுள் மும்மன்னர்பெருமையும் ஆங்காங்குப் புலப்படும்.

இம் முக்குடியிலும் பிறந்த அரசருள்ளே சிலர் இமயமளவும் படையெடுத்துச்சென்று வென்று தம் அடிப்படுத்தி ஆண்டு அரசு செலுத்திய வீரப்பெருமையுடையராவர். இது,

'பருப்பதத்துக் கயல்பொறித்த பாண்டியர் குலபதி'
'பொன்னிமயக் கோட்டுப் புலிபொறித்து மண்ணாண்டான்'
'கயலெழுதிய இமயநெற்றியின் அயலெழுதிய புலியும் வில்லும்'

என்பவற்றால் விளங்கும்.

இவர் தரைப்போர் கடற்போர் விண்ணினின்றுசெய்யும் போர் ஆகிய இவற்றில் வல்லுநராயிருந்தமை கடற்கடம்பெறிந்தது, கடல்சுவற வேலெறிந்தது, தூங்கெயிலெறிந்தது, வளிதொழிலாண்டது, பூதம்பணிகொண்டது முதலிய செய்திகளால்விளங்கும்.

இவர் கைக்கொண்டொழுகிய போர்த்துறை தொல்காப்பியத்துக் கண்ட புறத்திணைமுறைபற்றியமைந்தது; அறமுறை திறம்பாதது.

இவர், அமைச்சர் புரோகிதர் சேனாபதிகள் தூதுவர் சாரணர் என்னும் ஐம்பெருங்குழுவும், கரணத்தியலவர் கருமவிதிகள் கனகச்சுற்றம் கடைகாப்பாளர் நகரமாந்தர் படைத்தலைவர் யானைவீரர் குதிரைவீரர்: என்னும் எண்பேராயமும் துணைகொண்டு புலிப்போத்தும் புல்வாயும் ஒருதுறையில் நீருண்ணுமாறு பகைகடிந்து, மன்னுயிரெல்லாம் தம்முயிரென்னப் பாதுகாத்துச் செங்கோல் செலுத்தியவர்.

நீதிவழங்குதலிலும் இவர் சிறந்தவராவர். இது, மனுநீதி கண்டசோழன் பொற்கைப்பாண்டியன் செங்குட்டுவன் முதலியோர் செயல்களால் நன்கறியத்தகும்.

'மிளையும் கிடங்கும் வளைவிற் பொறியும்
கருவிரல் ஊகமும் கல்லுமிழ் கவணும்
பரிவுறு வெந்நெயும் பாகடு குழிசியும்

காய்பொன் னுலையும் கல்லிடு கூடையும்
தூண்டிலும் தொடக்கும் ஆண்டலை யடுப்பும்
கவையும் கழுவும் புதையும் புழையும்
ஐயவித் துலாமும் கைபெயர் ஊசியும்
சென்றெறி சிறலும் பன்றியும் பணையும்
எழுவும் சீப்பும் முழுவிறற் கணையமும்
கோலும் குந்தமும் வேலும் பிறவும்
ஞாயிலும் சிறந்து நாட்கொடி நுடங்கும்
வாயில் கழிந்து' (சிலப்பதிகாரம், அடைக்கலக்காதை 207-218)

என்பதனுலும் இவற்றின் உரையாலும் இவர்தம் மதிலும் பொறியும் படைகளும் முதலிய எல்லாம் விளங்கும்.

இவர் வீரத்தான்மட்டுமன்றிக் கொடை புலமை தமிழ்புரத்தல் முதலிய துறைகளிலும், தமக்கு ஒப்பார் மிக்கார் இல்லாத பெருஞ் சிறப்புடையராவர்.

சிபியும் குட்டுவனும் கரிகாலனும் முதலியோர் கொடையாற் சிறந்தவரென்பது உலகறிந்ததே.

சங்கங்கண்டும், புலவரை ஒருங்குகூட்டிப்புரந்தும், கவிகளாய் அரங்கேறியும் போந்தவாற்ருல் இவர்தம் தமிழ்ப்புலமையும்தமிழ் புரத்தலும் வெளியாம். முத்தொள்ளாயிரம் என்ற பழந்தமிழ்நூல் இம் மூவரையும் ஒக்கப் புகழ்ந்துபேசுதலே, இவர் மூவரும் தமிழ் வளர்த்தபெருமையுடையரென்பதனை விளக்கும்.

'மும்மலையும் மூங்நாடும் முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும்—மும்மாவும்
தாமுடைய மன்னர்'

என்பதனல் இவருடைய நாடும் மலையும் நதியும் நகரும் முரசும் கொடியும் மாவும் முதலியன குறிக்கப்படும்.

இவருள், சேரர் வஞ்சி தொண்டி முசிறி மாந்தை முதலியவற்றையும், சோழர் உறையூர் கருவூர் காவிரிப்பூம்பட்டினம் முதலியவற்றையும், பாண்டியர் மதுரை கொற்கை நெல்லை முதலியவற்றையும் தலைநகரங்களாகக்கொண்டு ஆட்சிசெய்துவந்தனர்.

சேரருடைய மலை-கொல்லி, நதி - பேரியாறு, கொடி - விற்கொடி, தார் - பனந்தார், பரி — பாடலம்.

சோழருடைய மலை - நேரி, நதி - காவிரி, கொடி-புலிக்கொடி, தார் - ஆத்திமாலை, பரி - கோரம்.

பாண்டியருடைய மலை - பொதியம், நதி - வையை பொருநை, கொடி-கயற்கொடி, தார்-வேப்பமாலை, பரி-கனவட்டம் என்பன.

'வேழ முடைத்து மலைநாடு மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்துப்—பூழியன்றன்
தென்னாடு முத்துடைத்து'

என்பது அந்நாடுகளுள் மிகுதியாக விளையும் சிறந்த பொருள் குறித்தெழுந்தது.

இவர்பெருமையெல்லாம் பேசப்புகின் விரியுமாதலின் இம் முக்குடியுள்ளும் ஒவ்வொருகுடிக்கு ஒவ்வொருவர்செய்தியே கூறத் தொடங்கிச் சேரர்குடியினருள் செங்குட்டுவனும், சோழர்குடியினருள் கரிகாலனும், பாண்டியர்குடியினருள் நெடுஞ்செழியனும் ஆகிய மூவர்செய்தியும் சுருங்க உரைக்கப்படும்.

I. **சேரன் செங்குட்டுவன்:**—இவன் பதிற்றுப்பத்துள் 5-ஆம் பத்துப்பெற்றவன்; அதனால் தன்னைப்புகழ்ந்த பாணர்க்கு உம்பர்க்காட்டு வாரியையும் தன்மகன் குட்டுவன்சேரலையும் பரிசிலாக நல்கியவன்; 55ஆண்டு அரசுபுரிந்தவன்; கனகவிசயராகிய வடவரசரைவென்று அவர்முடியில் இமயமலையிற் கல்கொண்டு கங்கையில் நீர்ப்படைசெய்து அக்கல்லால் வஞ்சியில் பத்தினிக்கடவுளுருவமைத்துக் கோயிலும் எடுத்துப் பூசையும் திருவிழாவும் நடத்தியவன்; இவன் தரைப்போரிலன்றிக் கடற்போரிலும் வல்லுநனாயிருந்தமையின் கடல்பிறக்கோட்டிய செங்குட்டுவன் எனவும் வழங்கப்படுவன். இவன்தந்தை நெடுஞ்சேரலாதன். குட்டுவன் இடும்பில், வியலூர், கொடுகூர் என்ற இடங்களில் நிகழ்ந்த போரில் வெற்றி பெற்றவன். பழையன்மாறனை வென்று அவன் காவல்மரமாகிய வேம்பினை வெட்டி அதை அவனுடைய அந்தப்புரத்துமகளிர் கழித்த கூந்தலைத் திரித்துக் கயிறாக்கி அதனால் அவனுடைய களிறுகளைப்பிணித் திழுப்பித்தவன்; சோழர்குடிப்பிறந்த ஒன்பதின்மர்

தன் மைத்துனன் கிள்ளிவளவனுடன் மாறுகொண்டு போர்க்கெழ, அவர்களை வென்று தன் மைத்துனனுக்குச் சோழநாட்டுரிமை வழங்கியவன்; தான் வடநாடுசென்றிருந்தகாலத்து அங்குவந்து தென்னாட்டுச் சோழபாண்டியமன்னர்செய்திசெப்பிய மாடலமறையோனுக்குத் துலாபாரதானஞ்செய்தவன். புறநானூற்று 369-ஆம் செய்யுள் இவன் போர்த்திறத்தைக் கிருஷித்தொழிலாக உருவகித்து அழகுறப் பேசிச்செல்லுகிறது.

இவன் சோழ பாண்டியர்களை வென்று அதன் அறிகுறியாக அவர்தம் புலியும் கயலும் தம்முடைய வில்லுடன் சேரப்பொறித்த கொடியுடையவன்.

'மழைவளங் கரப்பின் வான்பே ரச்சம்
பிழையுயி ரெய்திற் பெரும்பே ரச்சம்
குடிபுர வுண்டுங் கொடுங்கோ லஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்ப மல்லது தொழுதக வில்லை'— (சிலப். காட்சிக். 100-104)

என்று இவன் பேசுதலால் இவனுடைய அரசியற்றிறமையும் அரசியலநுபவமும் புலனாகும்.

'சினம்மிகு தானை வானவன் குடகடல்
பொலந்தரு நாவாய் ஓட்டிய ஞான்றைப்
பிறர்கலம் செல்கலா தனையேம்'—(புறம்-126)

என்று மாறோக்கத்து நப்பசலையார் கூறுதலின் இவனுடைய கடற்படைவன்மை விளங்கும். இன்னும் இவன்செய்தியெல்லாம் விரிக்கிற் பெருகும்.

II. சோழன் கரிகாலன்:—இவன் சோழன் உருவப்பஃறேரிளஞ்சேட்சென்னிபுதல்வன்; நாங்கூர்வேளிடை மகட்கொண்டோன்; இரும்பிடர்த்தலையாரை அம்மானாகப்பெற்றவன்; சுடப்பட்டு உயிருய்ந்தவன்; கழுமலத்திலிருந்து யானையாற் கொணரப்பட்டு அரசுரிமையெய்தியவன்; வெண்ணியென்னும் போர்க்களத்துச் சேரமான் பெருஞ்சேரலாதனையும் ஒரு பாண்டியனையும் வேளிர் பதினொருவரையும் வென்றவன்; முடத்தாமக்கண்ணியார் பாடிய பொருநாற்றுப்படையும் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடிய பட்டினப்பாலையும் பெற்றவன்; வீரருட்சிறந்தவீரன்; காவிரிக்கரை கண்டவன்.

இவன், பட்டினப்பாலைகேட்டு அதனை இயற்றிய கடியலூர் உருத்திரங்கண்ணனார்க்குப் பதினாறு நூறாயிரம்பொன் பரிசளித்த மையால் இவனுடைய தமிழ்ப்பற்றும் தமிழறிவும் தமிழ்ப்புலவரை இவன் நன்குமதித்தமையும் வெளியாகும்.

'ஏரியும் ஏற்றத்தினானும் பிறநாட்டு
வாரி சுரக்கும் வளனெல்லாம்—தேரின்
அரிகாலின் கீழுகூஉம் அந்நெல்லேசாலும்
கரிகாலன் காவிரிசூழ் நாட்டு'

என்று சிறப்பிக்குமாறு காவிரியால் தன்னாட்டை வளப்படுத்தினன்.

காவிரிக்கரைகண்டதனால் இவன் காவிரி வெள்ளமெடுத்து நாட்டையழியாமல் தடுத்ததன்றி அது பாசனவாரியாய் நீடிய விளையுளால் நாடுபுரந்தருமாறுசெய்து வியவசாயத்துறையிற் சிறந்த புகழுடையனாயும் விளங்கினான்.

'காடுகொன்று நாடாக்கிக்
குளந்தொட்டு வளம்பெருக்கிக்
கோயிலொடு குடிநிறீஇ'

என்னும் பட்டினப்பாலையடிகளால் நாடாக்குதற்றிறத்தும் ஆலய வழிபாட்டினும் இவன் கருத்துடையனாயிருந்தமை வெளியாகும்.

மன்றமும் பொதியிலும் பொழிலும் இயந்திரவாவிகளுமாகிய இவற்றுடன் காவிரிப்பூம்பட்டினத்தைப் பெரியதுறைமுகப்பட்டின மாக்கிக் கலங்கரைவிளக்கம் முதலிய சாதனங்களையும், உள்நாட்டி னின்று வெளிநாடுகளுக்குச்செல்லும் பண்டங்களையும் வெளிநாடு களினின்று கடல்மார்க்கமாக வந்திறங்கும் பண்டங்களையும் புலி பொறித்துக் கண்காணித்துக் கட்டணம் முதலியன வசூலித்தற்குச் சுங்கஇலாகாவையும் நிறுவிப் புகாருள், மொழிபல பெருகிய புலம் பெயர்மாக்கள் வாணிகத்தின்பொருட்டுவந்து கலந்தினிதுறையு மாறு புரிந்தமையின் இவன் வாணிகத்துறையிலும் பிற அரசரின் மேம்பட்டு விளங்கியவன் என்பதும் பிறநாட்டாரும் தன்னாட்சியில் விழைந்து வாழுமாறு புரந்தவன் என்பதும் தெரியலாகும்.

''உரைமுடிவுகாணான் இளமையோன் என்ற
நரைமுது மாக்கள் உவப்ப''

இளமைநாணி முதுமையெய்தி நரைமுடித்துச் சொல்லான் முறை செய்தமையின் இவன் நீதிவழங்குமநேர்மை புலனும்.

'இரும்பனம் போந்தைத் தோடும் கருஞ்சினை
மன்ற வேம்பின் அங்குழைத் தெரியலும்
ஓங்கிருஞ் சென்னி மேம்பட மிலைந்த
இருபெரு வேந்தரும் ஒருகளத் தவிய
வெண்ணிற் றாக்கிய வெருவரு நோன்றாட்
கண்ணார் கண்ணிக் கரிகால் வளவ'

என்னும் பொருநராற்றுப்படையடிகளால் இவன் சேர பாண்டியர் களை ஒரேகாலத்தில் ஒரேகளத்து ஒருங்கு வென்றவீரப்பாடுடைய னென்பது பெறப்படும்.

அன்றியும் இவன் விஷயமாகப் பொருநராற்றுப்படைபிறந்தமை யால் இவன் வீரர்தகுதியறிந்துபாராட்டித் தலையளிசெய்யுமியல்பி னன் என்பதும் போதரும்.

'திருமா வளவன் தெவ்வர்க்கு ஓக்கிய
வேலினும் வெய்ய கானம்
கோலினும் தண்ணிய தடமென் தோளே'

என்னும் பட்டினப்பாலையடிகளால் இவன் பகைதுரந்துலகளிக்கும் செங்கோற்றிறம் புலனாகும்.

இவன் இறந்தது குறித்துக் கருங்குழலாதனார் என்னும் புலவர்பெருமான் வருந்திக்கூறிய,

"அருப்பம் பேணாது அமர்கடந் ததூஉம்
துணைபுணர் ஆயமொடு தசும்பு தொலைச்சி
இரும்பா ணொக்கற் கடும்பு புரந்ததூஉம்
அறம் அறக் கண்ட நெறிமாண் அவையத்து
முறை நன்கறியுநர் முன்னுறப் புகழ்ந்த
தூவியற் கொள்கைத் துகளறு மகளிரொடு
பரிதி யுருவிற் பல்படைப் புரிசை
யெருவை நுகர்ச்சி யூப நெடுந்தூண்
வேத வேள்வித் தொழின்முடித் ததூஉம்
அறிந்தோன் மன்ற அறிவுடை யாளன்

இறந்தோன் றானே அளித்திவ் வுலகம்
அருவி மாறி அஞ்சுவரக் கடுகிப்
பெருவறங் கூர்ந்த வேனிற் காலைப்
பசித்த ஆயத்துப் பயனிரை தருமார்
பூவாட் கோவலர் பூவுடன் உதிரக்
கொய்து கட்டழித்த வேங்கையின்
மெல்லியன் மகளிரும் இழைகளைந் தனரே" (புறம்-224)

என்னும் செய்யுளாலும்

'அரிய அரண்களைப் பாதுகாவாது போரைச் செய்தழித்தது வும், துணையாய்க்கூடிய இனத்துடனேயுங்கூட மதுக்குடங்களைச் சோ நுகர்ந்துதொலைத்துப் பெரிய பாண்சுற்றத்தைப் பாதுகாத் ததுவும், அறத்தைத் தெளியவுணர்ந்த ஒழுக்கம் மாட்சிமைப்பட்ட அந்தணரது அவைக்களத்தின்கண் வேள்விக்குரிய முறைமையை நன்றாக அறியும் சடங்கவிகள் அம்முறைமையை முன்னின்று காட்டப் பலரானும் புகழப்பட்ட தூய இயல்பையுடைத்தாகிய கற் பொழுக்கமாகிய கொள்கையையுடைய குற்றந்தீர்ந்த குலமகளி ரொடு வட்டமாகிய வடிவினையுடைத்தாகிய பலபடையாகச் செய் யப்பட்ட மதிலாற் சூழப்பட்ட வேள்விச்சாலையுள் பருந்துவிழுங் குவதாகச் செய்யப்பட்டவிடத்து நாட்டிய யூபமாகிய நெடிய கம்பத்து வேதத்தாற் சொல்லப்பட்ட வேள்வியினைச் செய்து முடித்ததுவும், ஆகிய இவற்றானாய பயனை நிச்சயமாக அறிந்த அறி வினையுடையோன்......துஞ்சினன்; ஆதலால் இனி இவ்வுலகம் இரங்கத்தக்கது. அருவிநீர்மறுத்து உலகத்தார் அஞ்சும்பரிசு வெம்மையுற்றுப் பெரிய வற்கடமிக்க வேனிற்காலத்துப் பசித்த ஆயமாகிய பயன்படும் ஆநிரையை இரக்ஷித்தல்செய்வாராகக் கூர்மைபொருந்திய கொடுவாளாற் கோவலரானவர்கள் பூக்க ளுடனே உதிரக் கொம்புகளைக் கழித்து அதன் தழைச்செறிவை யழித்த வேங்கையினையொப்ப மெல்லியஇயல்பினையுடைய உரிமை மகளிரும் அருங்கல அணி முதலாகிய அணிகளை யொழித்தார்' என்னும் அதன் உரையானும் இவன் அறக்களவேள்வியும் மறக் களவேள்வியும் ஒருங்கியற்றிய பெருவீரனென்பதும் பெருங் கொடையாளியென்பதும் விளங்கும்.

III. பாண்டியன் நெடுஞ்செழியன்:— இவன் வெற்றிவேற் செழியன் என்ற நன்மாறன் மகன்; இளமைப்பருவத்தில் தலையாலங்கானத்துக் கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறையொடு போர்செய்து வென்று அவனைச் சிறைப்படுத்தியதனால் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனெனவும் கூறப்படுவன்; கோச்சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரலிரும்பொறைக்குத் துணையாய்வந்த அரசர் அறுவரையும் அப்போர்க்களத்தே வென்றவன்; வேள் எவ்வியின் மிழலைக் கூற்றத்தையும் பழைய வேளிருடைய முத்தூற்றுக்கூற்றத்தையும் வென்று கைக்கொண்டவன். மறக்களவேள்வியும் அறக்களவேள்வியும் செய்தவன்; செய்யுள்செய்தலிலும் வல்லுநன்; புலவர்களிடத்து மிக்க அன்புள்ளவன்; உத்தமகுணங்கள் பலவும் உடையவன். மாங்குடிமருதனாரியற்றிய மதுரைக்காஞ்சி கொண்டவன்; நக்கீரர் இயற்றிய நெடுநல்வாடைக்கும் தலைவன் இவனே.

இளையனாயிருக்கும்பொழுதே பலபேராசர்களையும் ஒருங்கு வென்ற பெருவீரன் இவனென்பது,

'கிண்கிணி களைந்தகால் ஒண்கழல் தொட்டுக்
குடுமி களைந்தநுதல் வேம்பின் ஒண்டளிர்
நெடுங்கொடி யுழிஞைப் பவரொடு மிலைந்து
குறுந்தொடி கழித்தகைச் சாபம் பற்றி
நெடுந்தேர்க் கொடிஞ்சி பற்றி நின்றோன்
யார்கொல்! வாழ்க அவன் கண்ணி; தார்பூண்டு
தாலி களைந்தன்றும் இலனே! பால்விட்டு
அயினியும் இன்றயின் றனனே; வயின்வயின்
உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை
வியந்தன்றும் இழிந்தன்றும் இலனே; அவரை
அழுந்தப் பற்றி அகல்விசும் பார்ப்பெழக்
கவிழ்ந்து நிலஞ்சேர அட்டதை
மகிழ்ந்தன்றும் மலிந்தன்றும் அதனினும் இலனே' (புறம் 77)

என்னும் இடைக்குன்றூர்கிழார்பாடலால் அறியலாகும்.

"நகுதக்கனரே நாடுமீக் கூறுநர்
'இளையன் இவன்'என உளையக் கூறிப்

படுமணி யிரட்டும் பாவடிப் பணைத்தாள்
நெடுநல் 'யானையும் தேரும் மாவும்
படையமை மறவரும் உடையம் யா'மென்று
உறுதுப் பஞ்சாது உடல்சினஞ் செருக்கிச்
சிறுசொற் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி முரசமொடு
ஒருங்ககப் படேஎன் ஆயிற் பொருந்திய
என்னிழல் வாழ்நர் செல்நிழற் காணது
'கொடியன் எம்மிறை'எனக் கண்ணீர் பரப்பிக்
குடிபழி தூற்றுங் கோலேன் ஆகுக!
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவ னாக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பிற்
புலவர் பாடாது வரைக என்நிலவரை
புரப்போர் புன்கண் கூர
இரப்போர்க் கியா இன்மையான் உறவே.' (புறம்-72)

என இவன் கூறுவதுகொண்டு இவன்வீரமும், குடியோம்புதலும், செங்கோன்மையும், புலவரால் நன்குமதிக்கப்படும் பெருந்தன்மையும், மாங்குடிமருதனார் முதலிய புலவரிடத்து இவனுக்குள்ள மிக்க பெருமதிப்பும் பெருங்கொடையும் முதலிய அருங்குணம் பலவும் அமைந்து அரசருட்சிறந்து விளங்கியமையும் அறியலாம்.

இன்னும் விரிக்கப்புகின் வரம்பிகந்து பெருகுமாதலின் இம் மட்டில் இதனை முடிப்போம்.

நாலடியார்—இருவருரைத்திருத்தம்

திரு. சத்தியவாகீசுவரையரவர்கள், தமிழ்ப்பண்டிதர், திருவநந்தபுரம்

[௪௬-ஆம்பக்கத் தொடர்ச்சி]

அதிகாரம்—யாக்கைநிலையாமை. பாட்டு—7.

29 படுமழை மொக்குளிற் பல்காலுந் தோன்றிக்
கெடுமிதோர் யாக்கையென் றெண்ணித்—தடுமாற்றம்
தீர்ப்பேம்யாம் என்றுணரும் திண்ணறி வாளரை
நேர்ப்பார்யார் நீணிலத்தின் மேல்.

இதன்பொருள்:—இது ஓர் யாக்கை படும் மழை மொக்குளில் பல்காலும் தோன்றிக் கெடும்—இந்த ஒருடம்பே பெய்கிற மழை நீரில் தோன்றுகின்ற குமிழிபோலப் பலகாலுந் தோன்றிக் கெடும் (அதாவது இந்தவுடம்பிலேயே தோற்றமும் கேடும் கணந்தோறும் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன), என்று எண்ணி—இவ்வாறு யாக்கை நிலையாமையை அறிந்து, தடுமாற்றம் தீர்ப்பேம் யாம் என்று உணரும் திண் அறிவாளரை—(இத்தகையவுடம்பை எடுத்தற்குக் காரணமான) விபரீத அறிவை நாம் போக்கிக்கொள்வோம் என்றுணர்கிற நிச்சயபுத்தியுள்ளவரை, நேர்ப்பார் நீணிலத்தின் மேல் ஆர்—ஒப்பவர் இந்தப் பெரிய பூமியில் எவரிருக்கின்றனர்? யாருமில்லை என்றவாறு.

பெய்கிற மழைநீரில் அதன் ஆகிருதிவிசேடங்களாக மொக்குள் பல கணந்தோறும் தோன்றி மறைதல்போலக் காணப்படுகிற இந்த வோருடம்பிலேயே அதன் ஆகிருதிவிசேடங்களாக வேறு வேறு கணந்தோறும் தோன்றிமறைகின்றன என இவ்வாறு யாக்கைநிலையாமையைக் கணத்துக்குக்கணம் நிகழ்வதாக உணர வேண்டும் என்றார்.

தடுமாறுதல் - ஒன்றை மற்றொன்றாக வுணர்தல். அதாவது: தானல்லாதவுடம்பைத் தானென்றும், தன்னோடியைபில்லாத பொருள்களைத் தன்னுடையன என்றும் உணர்தல். இவ்வாறு உணர்ந்து அவற்றின்கட் பற்றுச்செய்தல் பிறவிக்குக் காரணம்.

நேர்வார் என்பது எதுகைநோக்கி நேர்ப்பார் என நின்றது.

உரைகாரர்பிறர் தோன்றிக் கெடும் என்பதற்குப் பிறந்திறத்தலைப் பொருளாகக்கொண்டனர். இதோர் யாக்கை என்றிருத்தலின் அது பொருளாகாமை யறிக. தடுமாற்றம் - பிறவித்தடுமாற்றம்; பிறவியில் தடுமாறுவதென விளங்காப்பொருளுரைத்தனர். இது ஓர் இகழ்ச்சி என்றுங் கூறினர்.

அதிகாரம்—அறன்வலியுறுத்தல். பாட்டு—1.

அறன்வலியுறுத்தல்-அறஞ்செய்யவேண்டுமென்று வற்புறுத்தல்.

30 அகத்தாரே வாழ்வாரென் றண்ணாந்து நோக்கிப்
புகத்தாம் பெறாஅர் புறங்கடை பற்றி
மிகத்தாம் வருந்தி யிருப்பரே மேலைத்
தவத்தாற் றவஞ்செய்யா தார்.

இ—ள்:—மேலைத் தவத்தால் தவஞ்செய்யாதார் - முற்பிறப்பிற் செய்யப்பட்டு விட்டகுறையாய்நின்ற தவத்தால் அடுத்த பிறப்பிலே தவஞ்செய்தலை மேற்கொள்ளாதவர் = அதுசெய்தற்குப் பாக்கியமில்லாதவர், வாழ்வார் அகத்தாரே? என்று - (இரத்தற்கு ஒருவீட்டின் புறவாயிலையடைந்து) இவ்வீட்டில் வாழ்பவர் உள்ளேயிருக்கிறார்களா? என்று (சொல்லித் தம்வரவைத் தெரிவித்து), அண்ணாந்துநோக்கி - (சொன்னதுகேட்டுவருபவர்வரவை) நிமிர்ந்து பார்த்து, தாம் புகப்பெறார் - (புறவாயிலடைத்திருப்பதால்) தாம் தலைவாயிலையடுத்துச் செல்லமுடியாதவராய், புறங்கடைபற்றி - புறவாயிலை விடாமல், மிக வருந்தியிருப்பர் - (விதியை நினைத்து) மிக வருந்தி (அங்கே) நிற்பர் என்றவாறு.

புகத் தாம்பெறுர் என்பதால் அவர்பற்றிநிற்குமிடம் வீட்டின் தலைவாயிலன்றென்பதும் புறவாயி லடைக்கப்பட்டுள்ளதென் பதும் கிடைத்தன; புறங்கடை - புறவாயில். அது தலைவாயி லன்று. வீட்டைச்சூழ்ந்துள்ள நிலத்தின் எல்லைச்சுவரில் தலை வாயிலினெதிரில் அமைந்துள்ளது. பிறர் இதனைத் தலைவாயிலாகக் கருதியதால் உரியபொருள் கிட்டாமல் இடர்ப்பட்டனர். ஏ - வினு. "நெடுங்கடை நின்றுழல்வது" (இந்நூல் 107.) என்பதும் புற வாயிலையே. தவத்தால் என்பது செய்யாதார் என்பதில் பகுதி யோடு முடிந்தது. வாழ்வார் அகத்தாரே? என்றது உள்ளேயிருப் பார்க்குத் தம்வரவைத் தெரிவித்தற்கு. நெடுங்கடை - வீட்டுக் கட்டுக்களின் வாயில்களைவிட உயர்ந்திருத்தலின் நெடுங்கடை யாயிற்று. இதனைப் படிப்புறம் என்றல் மலையாளவழக்கு.

அதிகாரம்—ஈகை. பாட்டு—10.

31 கடிப்பிடு கண்முரசங் காதத்தோர் கேட்பர்
இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்பர்
அடுக்கிய மூவுலகுங் கேட்குமே சான்றோர்
கொடுத்தா ரெனப்படுஞ் சொல்.

இ—ள்:—கடிப்பு இடு கண் முரசம் காதத்தோர் கேட்பர் - குறுங்கழிகொண்டு கொட்டப்படுங் கண்ணையுடைய முரசவாத் தியத்தின் ஓசையை ஒருகாதத்திலுள்ளவர் கேட்பர், இடித்து முழங்கியது ஓர்யோசனையோர் கேட்பர் - மேகங்கள் ஒன்றோ டொன்று இடித்துக்கொள்வதாலுண்டாகும் இடிமுழக்கத்தை ஓர் யோசனை தூரத்திலுள்ளவர் கேட்பர், சான்றோர் கொடுத்தார் எனப்படும் சொல் - (இன்னபெயருடைய) சான்றோர் (தம்மிடம் வருபவர்க்கெல்லாம் நிரம்பக்) கொடுத்தாரென்று (அவருதவி பெற்றோரால்) சொல்லப்படுஞ்சொல்லை, அடுக்கிய மூவுலகும் கேட் கும் - ஒன்றின்மேலொன்றுயுள்ள மூவுலகத்தோரும் தம்செவியாற் கேட்பர் என்றவாறு.

இன்னபெயருடைய என்றது பாரி, ஆய்அண்டிரன் என்றாற்போல்வன. காதம் - இரண்டரைநாழிகைதூரம். யோசனை - பத்துநாழிகைதூரம். சான்றோர் என்பது உயர்த்தற்கண்வந்த ஒருவரைக்கூறும் பன்மைச்சொல். அது உதவிபெற்றோர் கொடுத்தாரைப் புகழ்ந்தசொல்.

எனப்படுமென்ற செயப்பாட்டுவினையாற் கொள்ளக்கிடக்கும் உதவிபெற்றோரால் என்றசொல்லை வருவித்துப் பொருள்கொள்வதைவிட்டு இடர்ப்பட்டும் உரியபொருள் காணமுடியாதநிலையில், சான்றோர்கொடுத்தார் என எழுவாயும் பயனிலையுமாக நிற்பதை மாற்றி, சான்றோர்கொடுத்தார் எனப்படும் சொல் என்பதற்குத் 'தக்கோரால் இவர் உதவிசெய்தவர் என்று மகிழ்ந்து கூறப்படும் புகழுரை' என இளவழகனாரும், 'பெரியோரால் இவர் யாசகர்க்குக் கொடுத்தார் எனப்பட்டசொல்' என இருவரும் கூறினர். ஒருவர் கூறிய புகழுரை அல்லது சொல் மூவுலகத்தாரும் தம் செவியாற் கேட்டற்குப் போதுமானதன்று. அதனால் அவருரை பொருந்தாமையறிக.

இனி, மூவுலகுங்கேட்டலாவது:— சான்றோரொருவர் இரவலர்க்கு வரையாதுகொடுக்குஞ்செய்தி அவரிடம் பொருள்பெற்றவர்வாயிலாக மெல்லமெல்ல எங்கும்பரவப் பலதிசைகளினின்றும் பலரும் வந்து அவர்கொடுப்பதைப் பெற்று மகிழ்ந்து மீள்கையில் 'இன்னபெயருடைய சான்றோர் எமக்கு நிரம்பக்கொடுத்தார்'. என்று எங்கும் புகழ்ந்துசெல்வாரன்றோ! அச்சொல் நாளடைவில் இவ்வுலகத்தில் யாவராலும் கேட்கப்படும். அதனோடு, அடுக்கியவுலகமாதலின் பிறவுலகங்களும் அச்சொல்லைக் கேட்க இடமாகும் என்பதாம்.

அதிகாரம்—மேன்மக்கள். பாட்டு—3.

32 நரம்பெழுந்து நல்கூர்ந்தா ராயினுஞ் சான்றோர்
குரம்பெழுந்து குற்றங்கொண் டேறார்—உரங்கவறா
வுள்ளமெனும் நாரினாற் கட்டி யுளவரையாற்
செய்வர் செயற்பா லவை.

இ—ள்:—நரம்பு எழுந்து நல்கூர்ந்தாராயினும்-உணவுபோதாமையால் உடம்பில் நரம்புகள் தோன்றும்படி வறுமையுற்றாராயினும், சான்றோர் குற்றங்கொண்டு குரம்பெழுந்து ஏறார் - குற்றஞ்செய்து குடிசையுடன் ஊரைவிட்டுப்பெயர்வார் சிலர்போலச் சான்றோர் ஊர்விட்டுச்செல்ல எண்ணார்; (மற்றென்செய்வாரெனின்), உரம் கவறா - தமது நல்லறிவே முக்காலிமரமாக, உள்ளம் எனும் நாரினால் கட்டி - ஊக்கமாகிய நாரால் மனமாகிய குரங்கைக் கட்டி (நிறுத்தி), உளவரையால் - தம்மிடமுள்ள பொருளளவுகொண்டு, செயற்பாலவை செய்வர் - செய்யக்கடமைப்பட்ட வொப்புரவுகளைச் செய்வர் என்றவாறு.

ஆயினுமென்பது அவ்வாறுதலின் அருமையுணர்த்திற்று.

ஏறார் - இடம்விட்டுநீங்கார் - மேற்செல்லார். பிறரெல்லாம் குரம்பெழுந்தென்பதற்கு வரம்புகடந்து என்றனர். "குரம்பு கொண்டேறி" என்ற மணிமேகலையடியை (18. 3.) காட்டினர் இளவழகனார். எழுந்து, கொண்டு என்பவற்றிற்குக் கடந்து என்று பொருள்கொள்ளல் இயலாதாகையால் குரம்பு வரம்பாகாது. அது, ஐயீற்றுடைக்குற்றுகரச்சொல்லாய்க் காம்பு காம்பை என்பனபோலக் குரம்பு குரம்பை என நிற்கும். அகராதியில் குடிசை என்றபொருளில் குரம்பு காணப்படவில்லை எனில் அது என் குற்றமன்று. பிறர்கூறிய வுரைகளின் பொருத்தமின்மை எனக்குத் துணைபுரிகின்றது. குரம்பெழுந்து குற்றங்கொண்டேறார் என்பதற்கு ஒழுக்கத்தின்வரம்புகடந்து, பிழையானவழிகளை மேற்கொண்டு, அவற்றில் தொடர்ந்துசெல்ல மாட்டார் என்பது இளவழகனாருரை. பிறரும் இப்படியே கூறினர்.

"குரம்புகொண்டேறி" என்பதில் குரம்புகொண்டு - வரம்பு கடந்து - நன்னெறிகடந்து என்ற பொருளுக்கு அந்த இடத்தில் ஆவசியமின்மை அச்சந்தருப்பங்கண்டறிக.

(தொடரும்.)

௨

இயவர் என்போர் யாவர்?

திரு. பண்டித S. அருளம்பலம் அவர்கள், ஆசிரியர்,
அரசினர் உயர்நிலைப்பள்ளி, காலி.

சங்கமிருந்து தமிழாராய்ந்த நல்லிசைப்புலவர்கள் பல்லோராலும் பாடப்பெற்ற எட்டுத்தொகைநூல்களுள் ஒன்று பதிற்றுப்பத்து' என்பது இந்நூல் பத்துப்பத்துச்செய்யுட்களைக்கொண்ட பத்துப்பகுதிகளையுடையது. ஒவ்வொருபகுதியும் ஒவ்வொரு சேர அரசன்மீது ஒவ்வொருபுலவராற் பாடப் பெற்றது. மூன்றாம்பத்தைப் பாடியவர் பாலைக் கௌதமனார் என்னும் நல்லிசைப்புலவராவர். இவர்பாடிய செய்யுளில் ஒருபகுதி,

"தொடர்ந்த குவளைத் தூநெறி யடைச்சி
யலர்ந்த வாம்ப லகமடி வையர்
சுரியலஞ் சென்னிப் பூஞ்செய் கண்ணி
அரிய லார்கைய ரினிதுகூ டியவர்
துறைநணி மருத மேறித் தெறுமார்
எல்வளை மகளிர் தெள்விளி யிசைப்பிற்
பழனக் காவிற் பசுமயி லாலும்
பொய்கை வாயிற் புனல்பொரு புதவின்
நெய்தன் மரபி னிரைக்கட் செறுவின்"—(பதிற். 27-2-10)

என்பது. இப்பகுதிக்கு எழுதப்பட்ட பழையவுரை,

"மடிவையரென்பதனை வினையெச்சமுற்றாக்கி அதனைத் தெள்விளியிசைப்பின் என்னும் வினையொடு முடிக்க."

"மகளிர் தெறுமார் இசைப்பின் காவிற் பசுமயில் ஆலும் என்றது வயலிற்புகுந்து உழக்காதிருத்தற்பொருட்டு அவ் வயற் புள்ளோப்பும் உழவர்மகளிர் அதனைக் கடியவேண்டித் தெள்விளி யிசைப்பின் இயவர் இயங்களின் ஒலிகேட்ட பழக்கத்தானே தன்னைக் கடிகின்ற ஒலியையும் அவற்றின் ஒலியாகக் கருதி மயில் ஆலுமென்றவாறு."

"நெய்தன்மரபின் நிரைக்கட்செறு வென்றது நெய்தல் இடையறுதி பூக்கும் மரபினையும் நிரைத்த வண்டினையுமுடைய செறு வென்றவாறு"

என்பதாம்.

ஈண்டுக் காட்டப்பட்ட பதிற்றுப்பத்துச் செய்யுட்பகுதியில் "சுரியலஞ் சென்னிப் பூஞ்செய் கண்ணி, அரியலார்கைய ரினிதுகூடியவர்" என்பது இயவரைக்கூறும் பகுதியாகும். இப்பகுதிக்கு, 'சுழிந்த மயிரையுடைய தலையையும் பூவாற்செய்த கண்ணியையும் கள்ளாகிய உணவையுமுடையாராகிச் சுருதியோடு இனிதே கூடுகின்ற வாத்தியத்தையுடையோர்' எனப் பொருளுரைத்து 'இவர் உழவர்' என்ற குறிப்பினுல் இயவரை உழவர் என்று கூறுவாரும் உளர். இக்கூற்று ஆராயற்பாலது.

இயவர் என்பதற்கு இயத்தையுடையவர் என்பது பொருள். (இயம்—வாச்சியம்) "கலித்த இயவர் இயந்தொட்டன்ன' (மதுரைக்காஞ்சி, 304) என்பதனுலும் 'இயவர்—வாச்சியக்காரர்' என்னும் நச்சினர்க்கினியர் உரையினுலும் இப்பொருளுடைமை நன்கு அறியலாகும்.

உழவரையே இயவர் எனப் புலவர் ஈண்டு கூறினரெனில் அவர்க்கு இயமே முதன்மையான கருவியாதல்வேண்டும். உழவர்—உழவுத்தொழிலையுடையர். "குடிநிறைவல்சிச் செஞ்சாலுழவர்" (பெரும்பாண். 197) என்புழி 'உழவர்—உழவுத்தொழிலையுடையோர்' என நச்சினர்க்கினியர் பொருளுரைத்தமை காண்க.

"வலம்பட நடக்கும் வலிபுண ரெருத்தின்
உரன்கெழு நோன்பகட் டுழவர்"—(சிறுபாண். 189-90.)

"குடிநிறை வல்சிச் செஞ்சா லுழவர்
நடைநவில் பெரும்பகடு புதவிற் பூட்டிப்
பிடிவா யன்ன மடிவாய் நாஞ்சில்
உடுப்புமுக முழுக்கொழு மூழ்க வூன்றித்
தொடுப்பெறிந் துழுத துளர்படு துடவை"-(பெரும்பாண். 197-201.)

"கொடுமேழி நசை யுழவர்"—(பட்டினப்பாலை. 205.)

"உழவருழாதன நான்கு பயனுடைத்து"—(புற. 109-3.)

"ஏரினுழாஅ ருழவர்"—(குறள். 14.)

என வருஉஞ் செய்யுட்பகுதிகளில் உழவர்க்கு ஏர் கருவியாகவும் உழவு தொழிலாகவும் கூறப்பட்டிருத்தல் காணலாகும்.

"கடம்பறுத் தியற்றிய வலம்படு வியன்பணை
ஆஒனர் பெயர்ந்துவர் தரும்பலி தூய்க்
கடிப்புக் கண்ணுறூஉந் தொடித்தோ ளியவர்"—(பதிற். 17-5-7.)

"மண்ணுறு முரசங் கண்பெயர்த் தியவர்
கடிப்புடை வலத்தர் தொடித்தோ ளோச்ச"—(பதிற். 19-7-8.)

என்னுமிடங்களில் வீரமுரசினை அடிப்போர்க்கு இயவர் என்னும் பெயர் பயின்றுவந்துளது. தோற்கருவி இசைப்போர்க்கு 'இயவர்' என்றும் பெயர் என்பது "இயவர் தோற்கருவி யிசைக்கு மாக்கள்" (571) என்னும் பிங்கலந்தையால் அறியலாகும்.

நெல்லரிதல் முதலாந் தொழினிகழுங்காலத்து முழக்கப்படும் பறையை யுடைய காரணத்தால் உழவர் இயவர் எனப்பட்டாரெனில், உழவர்க்கு இயம் கருவியன்றாதலின் உழவர் இயவராகார் என்க. உழவர்பறை கூறப்படு மிடங்களில் உழவர் இயவரென்னும் பெயராற் கூறப்பட்டிலர்,

"ஒலிந்த பகன்றை விளைந்த கழனி
வன்கை வினைஞ ரரிபறை"—(மதுரை. 261-2.)

"வெண்ணெ லரிநர் தண்ணுமை"—(மலைபடு. 471.)

"வெண்ணெ லரிநர் தண்ணுமை வெரீஇ"—(நற். 350-1.)

"வெண்ணெ லரிநர் பின்றைத் ததும்பும் தண்ணுமை"—(அகநா. 40-12-3.)

"வெண்ணெ லரிநர் மடிவாய்த் தண்ணுமை"—(அகநா. 204-10.)

"வெண்ணெ லரிநர் தண்ணுமை"—(அகநா. 236-4.)

"கழனி யுழவர் தண்ணுமை—(பதிற். 90-41.)

"வெண்ணெ லரிநர் தண்ணுமை"—(புற. 348-1.)

"கழனி வினைஞர்க் கெறிந்தபறை கேட்டு"—(திணைமொழி ஐம். 31.)

என்வரூஉஞ் செய்யுட்பகுதிகளில் 'இயவர்' என்னும் பெயர் பயின்றுவாராமை காண்க.

இனி, "இயவருமறியாப் பல்லியங்கறங்க" (336-6) என்று புறநானூற்றில் வருவதனால் இயவர் பல்லியங்களை நன்றாக அறிந்தவர் என்பதும் அவர்க்கும் பல்லியங்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பதும் அறியலாகும். பல்லியக்கருவியாளராய்ப் பண்டைக்காலத்தில் வாழ்ந்த

வந்தோர் 'கூத்தர்' 'பாணர்' என்போராவர் என்பது பத்துப்பாட்டு எட்டுத்தொகை முதலான பழந்தமிழிலக்கியங்களினால் அறியலாகும். கூத்தர் பல வாச்சியங்களையுடைமையாற் "பல்லியக்கோடியர்" (123) எனச் சிறுபாணாற்றுப்படையில் கூறப்பட்டுள்ளனர். இவர்கள் கொண்டு செல்லும் பல வகையான இசைக்கருவிகளை,

"திருமழை தலைஇய விருணிற விசும்பின்
விண்ணதி ரிமிழிசை கடுப்பப் பண்ணமைத்துத்
திண்வார் விசித்த முழவொ டாகுளி
நுண்ணுருக் குற்ற விளங்கடர்ப் பாண்டின்
மின்னிரும் பீலி யணித்தழைக் கோட்டொடு
கண்ணிடை விடுத்த களிற்றுயிர்த் தூம்பின்
இளிப்பயி ரிமிருங் குறும்பரந் தூம்பொடு
விளிப்பது கவருந் தீங்குழ றுதைஇ
நடிவுநின் றிசைக்கு மரிக்குரற் றட்டை
கடிகவர் பொலிக்கும் வல்வா யெல்லரி
நொடிதரு பாணிய பதலையும் பிறவுங்
கார்கோட் பலவின் காய்த்துணர் கடுப்ப
நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர்"—(மலைபடு. 1-13.)

"மூதவாய்க் கோடியர் முழவொடு புணர்ந்த
திரிபுரி நரம்பின் தீந்தொடை யோர்க்கும்"--(பட்டினப். 253-4.)

"புணர்புரி நரம்பின் தீந்தொடை பழுனிய
வணரமை நல்யா ழிளையர் பொறுப்பப்
பண்ணமை முழவும் பதலையும் பிறவுங்
கண்ணறுத் தியற்றிய தூம்பொடு சுருக்கிக்
காவிற் றகைத்த துறைகூடு கலப்பையர்"—(பதிற். 41-1-5.)

என்னும் செய்யுட்பகுதிகளால் அறியலாகும். இயங்களையுடையோரே இயவர் எனப்படுவர் என்பது 'இயவர் இயங்களின் ஒலிகேட்ட பழக்கத்தானே' எனவரும் பழையவுரைப்பகுதியானும் அறியலாகும். உழவர் ஏரைக் கருவியாக வுடைமையால் 'ஏரோர்' என்று கூறப்படுவர். 'ஏரோர்க்கு நிழன்ற கோலினை' (சிறுபாண். 233) யெனவும் வருதல் காண்க.

இனிது கூடு இயவர் என்றது இனிதாகிய இசைகளைத் தம்மிடத்தே கூடுதல்கொண்ட வாச்சியக்கார் என்றவாறு. "கூடுகொள் இன்னியம்"—

'இசைகளைத் தான் கூடுதல்சொண்ட யாழ்' என நச்சினார்க்கினியர் பொருளுரைத்தவாறு காண்க (சிறுபாண். 229 உரை). இனி, ஆடல் முதலிய துறைக்குவேண்டுவனவெல்லாம் இனிதுகூடப்பெற்ற வாச்சியத்தையுடையோர்' எனினுமாம். "காவிற்றழைத்த துறைகூடு கலப்பையர்" (பதிற். 41-5) என்பது ஈண்டுச் சிந்திக்கற்பாலது.

இனி இயவர்க்குக் கூறப்பட்ட அடைகளை ஆராய்வாம். சுரியலஞ் சென்னியையும் பூஞ்செய்கண்ணியையும் அரியல் ஆர்கையையுமுடைய இயவர் என்க. சுரியலஞ்சென்னி இயவர் என்றது கடைகுழன்ற மயிரையுடைய தலையையுடைய இயவர் என்றவாறு. சுரிவளர் பித்தையர்—'கடைகுழன்ற வளர்ந்த மயிரினையுடையராய்' (கலி. 4-1 நச். உரை.)

"எரியகைந் தன்ன வேடி முமரை
சுரியிரும் பித்தை பொலியச் சூட்டி"—(பொருந். 159-60.)

"புனைவினைப் பொலிந்த பொலனறுந் தெரியல்
பாறுமயி ரிருந்தலை பொலியச் சூட்டிப்
பாண்முற் றுகநின் னுண்மகி ழிருக்கை"—(புறநா. 29-3-5.)

எனக் கூத்தர் பாணர்களின் மயிர் கூறப்பட்டிருத்தல் சுரியலஞ்சென்னி என்றதன் கருத்தோடு ஒன்றுபட்டிருத்தல் காணலாகும்.

பூஞ்செய்கண்ணி இயவர் என்றது பூவினாற்செய்த கண்ணியைச் சூடிய இயவர் என்றவாறு. கண்ணி-தலையிலணியும் மாலை. இதனைப் "பெருந்தண் கண்ணிமிலைந்த சென்னியன்" (44) என்னும் திருமுருகாற்றுப்படையானுமறிக. இயவர் கண்ணிசூடிச் செல்லுதலை,

"குவியிணர் எருக்கின் றதர்பூங் கண்ணி
ஆடுஉச் சென்னி தகைப்ப"—(அகநா. 301-11-2.)

எனக் கோடியர் கூறப்பட்டவாற்றானறிக.

அரியலார்கையர் இயவர் என்றது கள்ளை நிரம்பவுண்பவராகிய இயவர் என்றவாறு. அரியல் என்றது அரிக்கப்படும் கள்ளை.

"வல்வாய்ச் சாடியின் வழைச்சற விளைந்த
வெந்நீ ரரியல் விரலலை நறும்பிழி"—(பெரும்பாண். 280-1.)

"கள்மர்க் கரித்த விளையல் வெங்கள்"—(புற. 212-2.)

என வருவன காண்க. ஆர்கையர் - நிரம்பவுண்பவர். இப்பொருட்டாதலை,

"ஊரா நற்றேர் உருட்டிய புதல்வர்
தளர்நடை வருத்தம் வீட வலர்முலைச்
செவிலியம்பெண்டிர்த் தழீஇப் பாலார்ந்து" (பெரும்பாண். 249-1.)

என்புழி "பாலார்ந்து-பாலை நிறையவுண்டு" என நச்சினார்க்கினியர் பொருளுரைத்தவாற்றானும் அறியலாகும். பாணரும் கூத்தரும் கள்ளை நிரம்பவுண்ணும் வழக்கமுடையார் என்பதும் அதனால் அவர்கள் தம்பால் வந்தவிடத்து அரசர்கள் மதுவழங்கினர் என்பதும்,

"பெறலருங் கலத்திற் பெட்டாங் குண்கெனப்
பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர
வைகல் வைகல் கைகவியாப் பருகி"—(பொருந. 156-8.)

"நீசில மொழியா வளவை மாசில்
காம்பு சொலித்தன்ன வறுவை யுடீஇப்
பாம்பு வெகுண்டன்ன தேறனல்கி"—(சிறுபாண். 235-7.)

"வந்தவ ணிறுத்த விரும்பே ரொக்கல்
நனையமை கள்ளின் தேறலொடு மாந்தி"—(பதிற். 12-14-8,)

"வயிரியர் உண்டெனத் தவாக் கள்ளின்
வண்கை வேந்தே"—(பதிற். 43-34-6.)

"தீஞ்சேறு விளைந்த மணிநிற மட்டம்
ஓம்பா வீகையின் வண்மகிழ் சுரந்து
கோடியர் பெருங்கிளை வாழ"—(பதிற். 42-12-4.)

"பாணர் மண்டை நிறையப் பெய்ம்மார்
வாக்க வுக்க தேக்கட் டேறல்
கல்லலைத் தொழுகு மன்னே"—(புறநா. 115-2-1.)

"அரவு வெகுண்டன்ன தேறலொடு சூடுதருபு
நிரையத் தன்னவென் வறன்களைந் தன்றே" (புறநா. 376-14-5)

"மகிழ்தரன் மரபின் மட்டே யன்றியும்
அமிழ்தன மரபி னூன்றுவை யடிசில்
வெள்ளி வெண்கலத் தூட்ட லன்றி"—(புறநா. 390-16-8.)

"தேட்கடுப் பன்ன நாட்படு தேறல்
... ...
விருந்திறை நல்கி யோனே"—(புறநா. 392-16-9.)

எனவரும் ஆன்றோர் வாக்குக்களால் அறியலாகும்.

இயவர் துறைக்கு அடையாகக் கூறப்பட்டுள்ளனர். இயவர்துறை - இயவரையுடைய துறை. 'துறைஅணி மருதமொடி......செறுவின்' என்றமையால் துறை மருதநிலத்திலுள்ள துறையாகும். துறைக்கு அணித்தாக மருதமரங்களிருத்தலால் வழிச்செல்லும் இயவர் ஆண்டுத்தங்கிச்செல்லுதலால் இயவர் துறை என்றார். இயவரைத் துறைக்கு அடையாக்கியுரைத்த தென்னையெனின் வயற்புள்ளோப்பும் உழவர்மகளிற் வயலிற்புகுந்து உழக்காதிருத்தற்பொருட்டு மயிலைக் கடியவேண்டித் தெள்விளியிசைப்பின் அவ்வொலியைத் தன்னைக் கடிகின்றவொலியாகக் கருதாமல் மயில் துறைக்கு அணித்தாகவுள்ள மருதமரத்தில் ஏறி ஆலுவதற்குத் துறையில்தங்கிய இயவர் இயங்களின் ஒலிகேட்டபழக்கம் ஏதுவாதல்பற்றியென்க. "இயவர் இயங்களின் ஒலிகேட்டபழக்கத்தானே.........மயில் ஆலும்" என்ற பழையவுரையானும் மருதநிலத்தில் இயவர் இயங்களை இசைத்துச்செல்லுதலறியலாகும்.

"எருதெறி களமரோதையொடு நல்யாழ்
மருதம்பண்ணி யசையினிர் கழிமின்"—(மலைபடு. 469-70.)

என்பதனால் கூத்தர் மருதநிலத்தே தங்கி யாழ்வாசித்துச் செல்லுதலும்,

"திருமருத முன்றுறை முற்றங் குறுகித்
தெரிமருதம் பாடுப பிணிகொள் யாழ்ப்பாணர்"—(பரிபாடல். 72-3.)

என்பதனால் பாணர் மருதத்துறையிலே தங்கிப் பாடுதலும் அறியலாகும் இதனால் இயவர் துறை என்பது பாணர் கூத்தரையுடைய துறையென்பது தெளிவாகும்.

இனி, இயவர் (5) எல்வளை மகளிர் (7) எனக்கூட்டி அதற்கே 'உழவர் மகளிர்' எனப் பழையவுரையாசிரியர் பொருள் உரைத்தாரெனில், மருதநிலத்திற் கூறப்படும் மகளிர் உழவர்மகளிர் என்பது தானே பெறப்படுதலின், உழவர்மகளிர் எனப் பொருளுரைத்தது அங்ஙனம் கூட்டியே என்றல் பொருந்தாதென்க. உழவர் என்பதற்கு இயவர் எனப் பொருளுரைப்பின் 'இயவர் இயங்களின் ஒலிகேட்ட பழக்கத்தானே' என உரையாளர் உரைத்தற்குச் செய்யுளில் யாதும் இயைபின்மையறிக.

இதுகாறுங் கூறியவற்றால் 'இனிதுகூடியவர்' எனப் பதிற்றுப்பத்திற் கூறப்பட்டோர் கூத்தர் பாணர் முதலான இயவராவரன்றி உழவராகார் என்பது தெளியலாகும்.

மதிப்புரை

[கயிலைபாதி காளத்திபாதித் திருவந்தாதி (உரையுடன்):--இயற்றியருளியவர்—நக்கீரதேவநாயனுர். உரையிட்டவர்—திருவாவடுதுறையாதீனவித்துவான் திரு. த. ச. மீநாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள். வெளியிடுவித்தோர்—திருவாவடுதுறையாதீனத்தார். கிடைக்குமிடம்—திருவாவடுதுறையாதீனமடம்.]

இவ்வந்தாதி சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினிய நூறு வெண்பாக்களால் இயன்றது. இதனுள் 1, 3, 5, 7, 9, 11, 13, 15, 17, 19 முதலிய ஒற்றையெண்கள்பெற்ற பாசுரங்கள் ஐம்பதும், இறைவன் தேவராலும் யாவராலும் அறிதற்கும் அடைதற்கும் அரியனுய் எழுந்தருளியிருக்கும் திருக்கயிலைமலையின் பெருமையினை நுவல்வன. 2, 4, 6, 8, 10, 12, 14, 16, 18, 20 முதலிய இரட்டையெண்பெற்ற ஐம்பதுபாடல்களும் அவ்விறைவன் எவ்வுயிர்க்கும் எளியனுய் இனிதுவீற்றிருந்தருளும் தென்கயிலாயமான திருக்காளத்திமலையின்சிறப்பினை விரிப்பன. இவ்வந்தாதிக்கு முன்னையோர் இயற்றிய உரையொன்று உண்டு. அது இதுபொழுது கிடைத்தற்கரிதாயிற்று. ஆகவே தமிழுக்குத் தாயகமாக விளங்கிவரும் திருவாவடுதுறையாதீனத்தின் இருபத்தொன்றுவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணியதேசிக பரமாசாரிய சுவாமிகள் இவ்வந்தாதியை யாவரும் படித்துப் பயன்கொள்ளும்படி தம் ஆதீனப்புலவரைக்கொண்டு இப்புத்துரையை யியற்றுவித்து அச்சிடச்செய்து வெளியிட்டருளியுள்ளார்கள். இப்புத்தகத்துள் இவ்வந்தாதியைப்பற்றியும் இதனையியற்றியருளிய ஆசிரியரைப்பற்றியும் அறியவேண்டியசெய்திகள் நன்குவரையப்பட்டுள்ளன. திருக்காளத்தி மூர்த்தி தல தீர்த்த மான்மியங்களும் இடையிடையே படங்களோடு விளக்கப்பட்டுள்ளன. திருக்காளத்தித் தலவிஷயமான தேவாரப் பாசுரங்களும் அவற்றுக்குக் குறிப்புரையும் சேர்க்கப்பட்டுள்ளன. சைவத்திருமுறையிற் சேர்த்தெண்ணப்பட்ட பெருமைவாய்ந்ததும் தமிழறிவொடு சைவசமயநெறிகளையும் இனிதுபுகட்டுவதுமான இவ்வந்தாதியையும் இன்னோன்ன பலதமிழ்நூல்களையும் தக்க புலவர்களால் நன்காராய்ந்து திருந்திய முறையிற் பதிப்பித்து வெளியிட்டுவரும் திருவாவடுதுறையாதீனத்தார்திறத்துத் தமிழ்மக்கள் நன்றிபாராட்டுங் கடப்பாடுடையர்.

[பிற்காலச் சோழர் சரித்திரம் (பகுதி II):— ஆக்கியோர்:—உயர்திரு. T. V, சதாசிவபண்டாரத்தாரவர்கள். வெளியிடுவித்தோர்— அண்ணாமலை பல்கலைக்கழகத்தார். கிடைக்குமிடம்—அண்ணாமலைபல்கலைக்கழகம்.]

ஆசிரியர் திரு. T. V. சதாசிவபண்டாரத்தாரவர்களைச் செந்தமிழ்நேயர் நன்கறிவர். அவர்கள் எழுதிய இப்புத்தகத்துள் கி. பி. 1070 முதல் கி. பி. 1279 முடியச் சோழநாட்டை ஆட்சி புரிந்து சிறந்த அரசர் எண்மரைப்பற்றி அறியத்தக்க செய்திகள் பலவும் வரிசைப்படத்தொகுத்து விளக்கப்பட்டுள்ளன. இதனுள் ஆசிரியர் மேற்கொண்டமுறைகள் அவருடைய உலகியலறிவினையும் நூலறிவினையும் நேர்மையினையும் சிலாசாசனம் செப்பேடு முதலியவற்றைத் துருவி துருவி யாராய்ந்து உண்மைகாணும் விழைவினையும் தெற்றெனப் புலப்படுப்பன. இச்சரித்திரநூலின் நடை தெளிவும் இனிமையும் வாய்ந்தது. முடிபுகள் பலவும் தக்க மேற்கோளுடன் கூடியவை. இந்நூல் இன்றியமையாத பல உறுப்புக்களுடன் நல்லகாகிதத்தில் பிழையற அச்சிடப்பட்டுள்ளது. தமிழில் நல்ல சரித்திரநூல்கள் இல்லையென்னும் குறைதீரும்படி, விரிந்து பரந்த சோழர்சரித்திரத்தைப் படிப்போர் புலங்கொளற்கேற்றவாறு தொகுத்து இரண்டுபாகமாக எழுதியுதவிய பண்டாரத்தாரவர்களும் அதனை நன்குபதிப்பித்துதவிய அண்ணாமலைபல்கலைக்கழகத்தாரும் பாராட்டற்குரியர். பண்டாரத்தாரும் அண்ணாமலை பல்கலைக்கழகமும் மேலும் பலநூற்கொடையாற் றமிழ்வளர்த்து நீடுவாழ்க. அரசாங்கத்தாரும் ஆசிரியர்களும் இந்நூலினை வித்வான் பரீக்ஷைமுதலியவற்றுக்குப் பாடபுத்தகமாகவைத்து இதனையெழுதியுதவிய பண்டாரத்தாரவர்களுக்கு மேலும் இன்னோரன்ன நூல்களையெழுதியுதவுமாறு ஊக்கமூட்டுவார்களாக.

பரிய கழங்கொடு வரையர மங்கையர் பந்தா டுங்காலைப்
பருவ முதிர்ந்துடல் துவள நறுஞ்சுனை வந்தா டுஞ்சூழல்
அருவி மயேந்திர சயில பரம்பர செங்கோ செங்கீரை
அழகிய நம்பியெ னமுத வளம்புயல் செங்கோ செங்கீரை. ()

குறிப்புரை:—கரதலம் - கை. சால - மிகவும். கமலம் மலர்ந்தெழும் உவளகம்-தாமரை மலரப்பெற்றுத்தோன்றுகின்ற தடாகம். உவளகம்-தடாகம். சிங்காரம் கூர - அழகு மிக. வலம்புரி - சங்கம். சுதரிசநம் - சக்கரம். கிரணம் காலும் தோறும் - ஒளிவிடுந்தொறும். மதியும் - சந்திரனும். இரும் - பெரிய. கதிரவனும் - சூரியனும். திருமால்திருமேனிக்கு மலையும் சங்கத்துக்கு மதியும், சக்கரத்துக்கு இரவியும் உவமை. கழங்கு - அம்மனை. உடல் துவள - உடல் வருந்த. மயேந்திரசயில - மகேந்திரமலையையுடையவனே! (27)

28 குருகு சிலம்பிய கழனி வரம்பினில் வண்டா மும்பூவிற்
குவளை பரும்பினில் முளரி விரிந்த தடஞ்சூ ழுந்தாவில்
இருகரை யும்பிறழ் திரைதவ ழும்புன லின்சாய் பஞ்சாயின்
இடிகரை யும்படர் கதலி கரும்பு வனஞ்சா லுஞ்சார்பிற்
சுரிமணல் வண்டலில் அலவனை யஞ்சிய மண்டூ கந்தாவும்
துறையில் மதங்கயம் ஒழுகு கயம்படு குண்டா ழங்காலில்
தெருவில் வலம்புரி மருவு குறுங்குடி நின்றாய் செங்கீரை
திகிரி தொடுங்கர அசுர பயங்கர செங்கோ செங்கீரை. (௩)

குறிப்புரை:—குருகு - அன்னப்பறவை. சிலம்புதல் - ஒலித்தல். கழனி - வயல். முளரி - தாமரை. தடம் - தடாகம். தாவு - இடம். திரை - அலை. புனலின் சாய் பஞ்சாயின் இடிகரையும் - நீரின்கட் சாய்ந்துள்ள கோரையையுடைய இடிந்த கரையிலும். சாலும்-மிக்க. சுரி - வரிவரியாகப்படிந்துள்ள. அலவன் - நண்டு. மண்டூகம் - தவளை. மதங்கயம் - மதயானை. ஒழுகு - (நீந்திச்) செல்லுகின்ற. கயம்படு - பெருமைபொருந்திய. குண்டு ஆழங்காலில் - குளத்தின் ஆழமான இடத்தில். திகிரி - சக்கரம். தொடும் - பிரயோகிக்கின்ற. கர - கையையுடையவனே. வரம்பினில், தாவில், சார்பில், வண்டலில், துறையில், குண்டாழங்காலில், தெருவில் வலம்புரி மருவு குறுங்குடியென இயைக்க. (28)

29 திருமுக முங்குறு நகையும் விரும்பினர்
கண்டார் கொண்டாடச்
செவிலி யணிந்தகை வளைகள் கலின்கலி
னென்றே நின்றோதப்
பெருகு குதம்பையு மிருகுழை யும்புய
பண்டா ரஞ்சூழப்
பிணையல் சரிந்தணி தரள வடம்புனை
தண்டா மந்தாழப்
புருவ முறிந்திட வமுத நிறைந்திதழ்
செந்தேன் வந்தூரப்
புழுதி யுடன்புழு கொழுகு கருங்குழல்
இங்கே பின்சோர
அரைவட முந்திரள் மணியு மசைந்தவ
செங்கோ செங்கீரை
அழகிய நம்பியெ னமுத வளம்புயல்
செங்கோ செங்கீரை. (௪)

குறிப்புரை:—குதம்பை - ஒருவகைக் காதணி. குழை - காது. புய பண்டாரம் - தோள்களாகிய நிதியறை. பிணையல், தாமம் என்பன மாலை வகைகள். தரளவடம் - முத்துமாலை. புழுகு - புனுகு. சோர - அவிழ்ந்து தொங்க. அசைத்தவ என்பது சந்தம் நோக்கி அசைந்தவ என்றானது மெலித்தல்விகாரம். அசைத்தல் - அணிதல். அழகியநம்பி! புயல்! அரைவடமும் திரள்மணியும் அசைந்தவ! (நீ) கொண்டாட, ஓத, சூழ, தாழ, ஊர, சோர செங்கீரையாடியருள் என முற்றுவிக்க. (29)

30 காலனை யஞ்சாது காலினு தைந்தால
கால விருந்தான போசன முண்டேறு
காளி மருங்கேக ரோடிகை யுஞ்சூடி
யாடிய கங்காள வேட மணிந்தோனும்
நாலுக முங்கூடி யூழி கடந்தாலு
நாழிகை யொன்றாத நான்முக வெங்கோவும்
ஞான வரம்பான வானவர் தம்பூமி
நாயக பண்டார வாசவ னென்போனும்

நீல படங்கிறு மாயிர செஞ்சோதி
நேமி நெடுந்தேரி லாதவ னென்போனும்
நீல விசும்பூர்கு பேரனும் வந்தார்கள்
வால வளம்பாடல் காண மகிழ்ந்தார்கள்
ஆலிலை யின்பாய லாதி முகுந்தேசன்!
ஆடுக செங்கீரை யாடுக செங்கீரை
யாட வுடன்பாடல் நீடு குறுங்கேச
னாடுக செங்கீரை யாடுக செங்கீரை. (ரு)

குறிப்புரை:—காலன் - யமன். காலில் - காலால். விருந்தான ஆல கால போசனம் உண்டோன் - சிவபெருமான். ஏறு - (தன்னோடு நடனஞ் செய்தற்குப்) புகுந்த. காளி - துர்க்கை. மருங்கு - பக்கத்து. கரோடிகை - முடிமாலை. கங்காள வேடம் - முழு வென்பு பூண்ட கோலம். உதைந்து, உண்டு, சூடி ஆடிய கங்காளவேடமணிந்தோன் (சிவபெருமான்) என்க. நாலுகமுங்கூடி யூழிகடந்தாலும் நாழிகை யொன்றாத நான்முக வெங்கோவும் - மக்களுக்கும் தேவர்க்கும் விதித்த கால அளவையால் பல யுகங்கள்கூடி ஊழிகடந்தாலும் ஒருநாழிகையளவுமாகாத காலஎல்லையை யுடைய பிரமனாகிய விரும்பத்தக்க தலைவனும், ஞானவரம்பான......னென் போனும் - அறிவினால் அடையும் எல்லைநிலமான தேவருலகுக்கும் நிதிகளுக்கும் தலைவனான இந்திரனென்று சொல்லப்படுபவனும். நீலபடம் - நீலத் திரை=இருள். நேமி - ஒற்றைச்சக்கரம். ஆதவன் - சூரியன். வால வளம் - பாலலீலைகளின் பெருமை. முகுந்தேச! குறுங்கேச! சிவன், பிரமன், இந்திரன், சூரியன், குபேரன் என்போர் வந்து நின் பாலலீலைகளையும் அவை சம்பந்தமான பாடல்களையும் காணவிரும்பினார்கள். ஆதலால் நீ செங்கீரையாடியருள் செங்கீரையாடியருள் என முடிவுகொள்க. (30)

31 வாரண முங்காம தேனுவு மைந்தாரு
நீழலும் வெண்சோம ரேகையும் வந்தேற
வாரிக டைந்தூறு மாரமு தின்சோலை
வானவி ருந்தீயு ஞானமு குந்தேச
நாரண கெம்பீர பூரண சங்காழி
நாயக சங்கீத வேத பரந்தாம
நானில மண்காவல் யாதவர் தம்பாவை
தேவகி யன்பான கோசலை தன்பால

மேருவெ னும்பார வாகும லைந்தாடு
காதும ருந்தோடும் வீதிபு குந்தாட
மேனிகு ழைந்தாட வால்வளை நின்றாட
மேவலர் திண்டாட நாவலர் கொண்டாட
ஆரம சைந்தாட மாலைச ரிந்தாட
ஆடுக செங்கீரை யாடுக செங்கீரை
ஆடலு டன்பாடல் நீடுகு றுங்கேசன்
ஆடுக செங்கீரை யாடுக செங்கீரை. (௯)

குறிப்புரை:—வாரணம் - ஐராவதம். தேனு - காமதேனு. ஐந்தாரு- பஞ்சதருக்கள். சோமரேகை - கீற்றுவடிவான பிறைச்சந்திரன். வந்து ஏற — மீளத் தோன்றிச் சிறக்க. வாரி - (இங்கே) திருப்பாற்கடல். அமுதின் சோனை - அமுதப் பெருக்கு. வானவிருந்து - வானுலகிலுள்ளார்க்குச் செய்யும் விருந்து. பார வாகு - பெரிய தோள். மலைந்து ஆடு காது - பொருது அசைகின்ற காது. காதும் தோடும் நேராக அசைய. வால்வளை - வெள்ளிய வளை. மேவலர் - பகைவர். முகுந்தேச! நாரண! கெம்பீர! பூரண! நாயக! பரந்தாம! தேவகியன்பான பால! கோசலையன்பான பால! குறுங்கேச! காதும் தோடும் ஆட, மேனி ஆட, வளை ஆட, ஆரம் ஆட, மாலை ஆட, மேவலர் திண்டாட, நாவலர்கொண்டாட செங்கீரையாடுக செங்கீரை யாடுக என முடிவுகொள்க. (31)

32 வந்துவி சும்புது றந்துல கிம்பர்
மணந்த செழுங்காரின்
வண்டுமு ரன்றெழு கஞ்சமி ரண்டு
மலர்ந்த பெரும்பான்மைச்
சந்திர மண்டல மொன்றுகி டந்து
தயங்கு கவின்போலத்
தங்கு முகம்புரு வங்கள்ப சுங்குமிழ்
தண்டுளி வந்தூர
இந்திர.ரிம்பரி றங்கும யேந்திர
மென்ற சிலம்பாளன்
எங்கள்மு குந்தன பங்கன சஞ்சலன்
இந்திரை தன்கேள்வன்

இந்துத ரங்கநெ டுந்துறை வன்றிகழ்
செங்கோ செங்கீரை
செண்பக நம்பி குறுங்கைவ ரும்புயல்
செங்கோ செங்கீரை. (எ)

குறிப்புரை:—விசும்பு துறந்து வந்து இம்பருலகு மணந்த செழுங்காரின் என மாறிக்கூட்டுக. இம்பருலகு - இவ்வுலகு. விசும்புதுறந்து இம்பருலகு மணந்த கார் நித்யவிபூதியைவிட்டு லீலாவிபூதியை அடைந்த அழகியநம்பிக்குவமம். மூரன்று - ஒலித்து. கஞ்சம் இரண்டு மலர்ந்த சந்திரமண்டலமென்றது அலர்ந்த தாமரைமலர்போன்ற திருக்கண்களையுடைய அழகியநம்பி திருமுகமண்டலத்தை. பசுங்குமிழ் என்றது நம்பி திருமூக்கினை. அபங்கன் – பங்கமற்றவன். அசஞ்சலன் - சஞ்சலமில்லாதவன். இந்திரை கேள்வன் - இலக்குமிநாயகன். தன் அசை. சிலம்பாளன், முகுந்தன், அபங்கன், அசஞ்சலன், இந்திரைகேள்வன், துறைவன், செண்பகநம்பி, புயல் என்பவை விளி. (32)

33 அந்தர துந்துமி நின்று முழங்க
அநங்கர தம்பாலித்
தன்பு தழைந்த கொழுந்து விடுஞ்சிறு
தென்றல சைந்தூரச்
சந்தன குங்கும வம்பர் கதம்ப
நெகிழ்ந்து குழம்பாடச்
சண்பக முந்த மலர்ந்த செவந்தி
முகந்துல கந்தூவ
மந்திர வந்தனை கொண்டுயர் கிம்புரு
[1] கின்னரர் பண்பாட
வந்தர விந்தையும் அம்புவி மங்கையும்
நின்று மருங்காரச்
சிந்து தரும்புனன் மஞ்சன நம்பி
சிறந்தருள் செங்கீரை
செண்பக நம்பி குறுங்கை வரும்புயல்
செங்கோ செங்கீரை. (அ)

---

[1] விஞ்சையர் [பி-ம்.]

குறிப்புரை:—அகக்காதம் - கர்மச்சுவை. அம்பர் - நறுமணக்கமழும் பொருளில் ஒன்று. கதம்பம் - வாசனைப்பொடி. அரவிந்தை - இலக்குமி. துந்துமி முழங்க, தென்றல் ஊர, வாசனைப்பொடிகள் குழம்பாட, உலகம் தூவ, கிம்புருடரும் கின்னரரும் பண்பாட அரவிந்தையும் புவிமங்கையும் மருங்கு ஆர சிந்துதரும்புனல் திருமஞ்சன (ங்கண்டருள்) நம்பி! செண்பக நம்பி! குறுங்கைவரும் புயல்! செங்கீரையாடியருள் செங்கீரையாடியருள் என முடிக்க. (33)

34 மங்குல் மலைந்தெழு திங்கள் நெடுங்குடை
வன்கன கன்கூற
வண்கழ கம்புகு மைந்த னவன்பெயர்
முந்தவி ளம்பாமற்
றங்கள் முகுந்த னரும்பெயர் விண்டது
கண்டவ னுஞ்சீறிச்
சங்கரன் வெண்பணி லங்கரன் அஞ்சி
ஒதுங்கிய கண்டாயே
எங்குள னெங்குள னென்றுரை தந்திட
வெங்குமு ளன்காணெந்
றெந்தை விளம்பிட விங்குள னேவென்
றெற்றிய கற்றூணிற்
சிங்க மெனும்படி வங்கொடு வந்தவ
செங்கோ செங்கீரை
செண்பக நம்பி குறுங்கை வரும்புயல்
செங்கோ செங்கீரை. (௩௪)

குறிப்புரை:—மங்குல் மலைந்து - இருளைப்பொருது. கனகன் - இரணியன். கழகம் - பள்ளிக்கூடம். மைந்தன் - பிரகலாதன். அவன் பெயரென்றது 'இரணியாயநம' என்பதனை. வெண்பணிலம் கரன் - வெள்ளிய சங்கத்தைக் கையின்கட்கொண்ட திருமால். எங்குளன்? எங்குளன்? என்பது இரணியன் வினு; அடுக்கு. எங்குமுளன் என்றது பிரகலாதன்கூற்று. எந்தையென்றது பிரகலாதனை. படிவம் - உருவம். (34)

35 அகழிப் படுகிடங்கு பிறவிக் கடலைநெஞ்ச
மஞ்சார் தஞ்சார்வே
யசுரர்க் கிடர்புரிந்து முனிவர்க் கருள்சுரந்து
தென்பால் வந்தோனே
நிகளத் தறிபிடுங்கு மதமத் தகபிறங்கல்
முன்போ துந்தேவே
நிபுணப் புலமையின்சொல் வரிசைத் தமிழறிந்து
பின்போ மெங்கோவே
புகழத் தகுமநந்த முளரிப் பிரமர்தங்கள்
கும்பீ டன்போனே
புரிசைக் குடுமிகண்டு குழவிப் பிறைதவழ்ந்து
மஞ்சா டுங்கால்சூழ்
சிகரத் தமர்குறுங்கை நகருத் தமமுகுந்த
செங்கோ செங்கீரை
திருவைப் புணர்முகுந்த திருவிக் கிரமநம்பி
செங்கோ செங்கீரை. (௧௦)

குறிப்புரை:—அகழிப் படுகிடங்கு பிறவிக்கடலை நெஞ்சமஞ்சார்தம் சார்வே - தோண்டப்பட்ட கிடங்காகிய பிறவிக்கடலையஞ்சாதவர்களுக்குப் பற்றுக்கோடானவனே. இடர் - துன்பம். தென்பால் வந்தோன் - இராமன். நிகளம் - விலங்கு. மத்தகபிறங்கல் என்றது இங்கே கஜேந்திரனை. தமிழறிந்து பின்போனது - கணிகண்ணன்பொருட்டுத் திருமழிசையாழ்வார் பின்சென்றது. அநந்த முளரிப்பிரமர் - தாமரைப்பூவில் வசிக்கின்ற எண்ணற்ற பிரமர். கும்பீடு - வணக்கம். புரிசைக்குடுமி - மதிலின் உச்சி. பிறைக்குழவி புரிசைக்குடுமிகண்டு தவழ்ந்து மஞ்சாடும் கால்சூழ் சிகரத்து அமர் குறுங்கை என இயைக்க. மஞ்சு - மேகம். கால் - காற்று. சிகரம்- உச்சி. அஞ்சார்தம் சார்வே! தென்பால்வந்தோனே!, தேவே!, கோவே! அன்போனே! உத்தம!, முகுந்த!, திருவிக்கிரமநம்பி! செங்கீரையாடியருள் செங்கீரையாடியருள் என முடிக்க. (35)

உ. செங்கீரைப்பருவம் முற்றிற்று.

ஆகக்கவி-௩௫.

அழகியநம்பி துணை.

ரு. தாலப்பருவம்.

36 மீளி நிகும்பலை யாளி கரந்தினி யாகா போகாதே
மேக மறைந்தது மாண்மையி லன்றுயிர் மாதா வேதாவால்
நீளு மிரும்படை கோளர வின்படை யேவாய் [1]போவாய்போர்
நீயென வெம்பிய ராவணி தன்றலை கீழாய் வீழாநேர்
யாளி துரங்கமி யானை பரிந்தெழு சீரார் தேர்மீதே
ராவண னும்பல சேனையு மைந்தரும் வேறாய் நீறாயே
தூளி படும்படி வாளி தொடும்புயல் தாலோ தாலேலோ
தூய குறுங்குடி மேய [2]நெடுந்தகை தாலோ தாலேலோ. (க)

குறிப்புரை:—மீளி - வலியான். நிகும்பலையாளி - நிகும்பலையை ஆள்பவன்—இந்திரஜித்து. மீளி!, நிகும்பலையாளி! விளி. இனி நீ கரந்து ஆகா - இனி நீ ஒளித்திருத்தலால் போர்ச்செயல்கள் ஆவனவல்ல. போகாது மேகம் மறைந்ததும் ஆண்மையன்று - நீ போர்க்களத்திற்புகாது மேகமண்டலத்து மறைந்ததும் ஆண்மையன்று. இல் அல்வழிச்சாரியை. உயிர் மாதா வேதாவால் நீளும் இரும்படை கோள் அரவின்படை ஏவாய் - உயிர்களைப் பெற்ற தாயான பிரமன் பெயரால் பெருமைமிக்க அத்திரத்தையும் வலிய நாகாத்திரத்தையும் செலுத்துவாயாக. போர் போவாய் என - போர்க்குச் செல்வாயாக என்று (இராவணன்) சொல்ல. மீளி என்பது தொடங்கி, போர் போவாய் நீ என்பதுவரை இலக்குமணனம்புகளால் தாக்குண்டு எய்த்து மேகத்தின் மறைந்து இலங்கைபுக்க இந்திரசித்தைநோக்கி இராவணன்கூற்று. இராவணி - இந்திரசித்து. வீழா என்பதனை வீழ எனச் செயவெனெச்சமாக்குக. துரங்கம் - குதிரை. பரிந்து—விரைந்து. நீறு - சாம்பல். வாளி - அம்பு. (36)

37 அரவத் துவசத் தவசத் தனிரா சாவாய் நாடாள
அவசக் களரிச் சமயத் தறநிலை நேரா யாராயா
தூல்நெட் டரையிற் றுகில்தொட் டுரிவன போலே மாலேதோ்
ஒருபத் தினியுத் தமியைத் துகில்தொட வோகோ வாகாதா
இருமைப் பிறவிக் குமருத் துவனன தேவா காவாநீ
எனுமற் புதசொற் செவியிற் புகவவள் வீணாய் நாணாதே
சரியச் சரியத் துகிலைத் தருபவ தாலோ தாலேலோ
தருணக் கிரணத் தழகுக் கதிபதி தாலோ தாலேலோ (உ)

---

[1] ஏவாய் [2] பெருந்தகை [பி-ம்.]

குறிப்புரை:—அரவத் துவசத்து அவ சத்தன் - பாம்புக்கொடியுடைய பிழைமொழியினனான துரியோதனன்! களரி அவசச்சமயத்து - சூதாடுமிடத்துத் தன்வசமற்றபொழுதில். நெட்டுரலரையில் என மாற்றிக் கூட்டுக. தொட்டு உரிவன நெட்டுரலரையில் துகில் போலே - பற்றிக்களையப் படுவனவாகிய நீண்ட உரலின் இடைப்பாகத்தே கட்டப்பட்ட உடையைப் போலே. மாலே தேர் ஒரு பத்தினியை - கண்ணனைப் பரம்பொருளாகவே தெளிந்த ஒப்பற்ற கற்புடையாளான துரோபதையை. துகில்தொட - உடைபற்ற. 'ஓகோ' என்பதுமுதல் 'காவாநீ' என்பது வரை துரோபதை கூற்று. ஓ, கோ என்பவை இரக்கப்பொருள்பற்றி வரும் இடைச்சொற்கள்; புலம்பலில்வரும் விளிப்பொருள எனினும் அமையும். இருமைப் பிறவிக்கும் மருத்துவன் அ(ன்)ன தேவா! நீ வாவா காகா தா, என மாற்றிக் கூட்டிக்கொள்க. இருமை - இம்மை, மறுமை. மருத்துவன்-வயித்தியன். மருத்துவன் அன்ன தேவன் என்றது கண்ணனை. தா என்பதனை மீண்டும் கூட்டித் தாதா என ஆக்கிக்கொள்க. வாவா காகா தாதா என்பன விரைவுபற்றிவந்த அடுக்கு. அவள் - துரோபதை. (37)

38 மரபுக் கொருபெற் றதகப் பனையுயிர் மாயா வாய்காவா
மழவர்க் குரிமைப் புவனக் குடைநிழல் சூழ்வார் தாழ்வாரா
இருபத் தொருவர்க் கமுமற் றரசற வேரோ டேகீளா
வெறிபச் சுதிரப் புனல்தற் பணமிட வாள்வேல் கூடாதே
பரசிற் பரசிச் சமரிற் பொருதுயிர் சாவா மூவாவோர்
பரசிற் பரசித் திதனைக் கருதிய கோவே தேவேசா
தருவைப் பரவைப் புவியிற் றருபவ தாலோ தாலேலோ
தருணக் கிரணத் தழகுக் கதிபதி தாலோ தாலேலோ. (௩௮)

குறிப்புரை:—மரபுக்கு ஒரு பெற்ற தகப்பனை - வம்மிசத்தினருள் ஒப்பற்றவனாகிய பெற்ற தந்தையை. இங்கே தந்தை யென்றது ஜமதக்கினி முனிவரை. உயிர்மாயா - இறக்கும்படிசெய்து. வாய் காவா மழவர் - உண்மையைக் காவாத இளையர்; என்றது கார்த்தவீரியன்மக்களை. மழவர்க்கு அவர்க்குரியதான பூமியொடு குடைநிழலும் நிலைக்கும்படி சூழ்வோராகிய அமைச்சர்முதலியோர் தாழ்வாராக, அரசர் இருபத்தொரு தலைமுறையற்று நிர்மூலமாய் அழியப் பிளந்து என்க. எறி- அலைமோதுகின்ற. உதிரம்-ரத்தம் பரசின் - மழுவென்னும் ஆயுதத்தால். பரசி - எளிதாக வாரி. சமர் - போர். உயிர் சாவா மூவா ஓர் பர சிற்பர சித்திதனைக் கருதிய கோவே - உயிர் இறந்துபடாமையும் கிழத்தன்மையடையாமையுமான ஒப்பற்றமேலான

இறைநிலையெய்து தலைக் கருதிய தலைவனே! என்றது பரசிராமனை. தருவை-பாரிஜாதத்தை. பரவைப்புவியில் - கடல்சூழ்ந்த நிலவுலகில். தருபவன் என்றது கண்ணனை. இங்கே நப்பின்னைக்காகத் தேவதருவான பாரிஜாதத்தைக் கண்ணன் நிலவுலகிற் கொணர்ந்த வரலாறு சுட்டப்பட்டது. (38)

39 கலகக் கடினகஞ்சன் மறலிப் படிவமென்று
கடுவிற் கொடியதென்று தாவா வேவாநீள்
கருடக் கடவுள்பம்பு சரவப் பறவைகங்கம்
வெருவிப் படர்விசும்பி னூடே போகாதே
புலவிற் குருதிமொண்டு வழியத் துளிகவிழ்ந்து
பொழியக் கவர்திறந்த பேழ்வாய் வாழ்வாயே
புருவப் புடைமுறிந்து நயனக் கடைசிவந்து
சமரத் தினவெழுந்து வேறே போர்காணு
துலவைத் துழனிபொங்க வுதறிச் சிறைகுடைந்து
நகசிற் றுளியழுந்து காலா லேகீறு
உலகிற் செவிபுழுங்க வலரிக் குழல்முழங்க
வருபுட் சினமடங்க நாவாய் தீவாய்கூ
ரலகைப் பிளவுகண்டும் உயிரைக் களவுகண்டும்
அலகைக் கிளவிகொண்ட காரே தாலேலோ
அழகுக் கொருவர்கண்டு மெழுதற் கரியநம்பி
யமுதக் குழகநம்பி தாலோ தாலேலோ. (௯)

குறிப்புரை:—கஞ்சன் - கம்ஸன். மறலி - எமன். படிவம் - வடிவம். கடு - விடம். கம்ஸன், கடுவிற் கொடியதென்று மறலிப் படிவமென்று புள்ளை தாவு(க) ஏவ, பொங்க, புழுங்க, முழங்க விசும்பினூடு போகாது உலகில் வரு புள் என்க. பம்பு - நெருங்கிய. சரவப்பறவை - சரபப்புள். கங்கம் - கழுகு. புலவிற் குருதி - புலால்நாற்றத்தோடுகூடிய இரத்தம். கவர் திறந்த - பிளவுபட்ட. பேழ்வாய் வாழ்வாய் - பெரியவாயின்கண் தங்கு தலைப் பொருந்தி. புருவப்புடை - புருவத்தின்பக்கம். நயனக்கடை - கடைக்கண். சமரத்தினவு - போர்த்தினவு—போர்விருப்பு. உலவைத் துழனி பொங்க - ஊழிக்காற்றொலி எழும்படி. சிறை உதறி சிறை குடைந்து என்க. நகமாகிய சிறிய உளி. அலரிக் குழல் முழங்க - பூப் போன்ற வாயையுடைய குழல் ஒலிக்க. குழல் - மரக்கொம்பு. அலகு - மூக்கு. அலகைக்கிளவி - புகழ்ச்சொல். (39)

40 சூழிமு காசலங்க டாசல மாரிபொங்க வாரா நீரூடே
சூழியின் வாயிடங்கர் கால்கவ ராமுனிந்த போதே மீதேகூ
ராழிமு ராரியெங்கள் மூலமெ னுமொழிந்த வாசா வேகேளா
வாடக மேருவென்ற சீகரு டேசதுங்க தோண்மே லேயேறு
வாழிய மாலைகுஞ்சி பீதக வாடைபின்பு தாழா வீழாநேர்
வான்வழி யேவிரைந்து நாழிகை போமுன்வந்த சூரா வீராநீள்
தாழைப லாவரம்பை வாழைகள் சூழ்குறுங்கை நாடா தாலேலோ
தாமரை மாதுநம்பு நாதவி நோதநம்பி தாலோ தாலேலோ. (ரு)

குறிப்புரை:— சூழிமுகாசலம் - நெற்றிப்பட்டத்தையுடைய யானை— கஜேந்திரன். கடா சல மாரி - மதநீராகிய மழை. வாரா - வந்து. சூழியின்வாய் - தடாகத்தில். இடங்கர் - முதலை கால் கவரா - காலைப்பற்றி. சூராழி முராரி - சூரிய சக்கரப்படையையுடையமுராரி. வாசா - வார்த்தை-சொல். ஆடக மேரு - பொன்மலையான மேரு. சீ கருடேசதுங்க தோள் மேலே - ஸ்ரீகருடபகவானுடைய உயர்ந்த தோள்மேலே. ஏறு - ஏறி. குஞ்சி - குழல். பீதக வாடை - பொன்னுடை. தாழா வீழா - தாழ்ந்து விழ. தாழை - தெங்கு. வரம்பை - எல்லையை. நம்பு - விரும்புகின்ற. (40)

41 மறுகித் துயருழந்த அரவுக் கரசனஞ்சி
வானோ ரானோர்சூழ்
வனசக் கழல்புனைந்து விரலொற் றியதழும்பு
போலே மேலேசூழ்
கறைபற் றியசிரங்கள் மகுடத் தலைகுலுங்க
வீழ்கான் யாறூயே
கடுகக் கடுவுடைந்து துளைநெட் டெயிறுதிர்ந்து
வால்கீழ் மேலாயே
இறுகக் காதலங்கள் பிடிபட் டுடல்நடுங்க
வாயூ டேதீகால்
இருகட் கடைபிதுங்க வொருகட் படமொதுங்க
மீதாய் வாதாடா
முறுகிப் பவுரிகொண்டு திருகித் திருநடஞ்செய்
தாளாய் தாலேலோ
முழுகிப் பரிமளஞ்செய் புழுகிற் கமழுநம்பி
தாலோ தாலேலோ. (சு)

குறிப்புரை:—மறுகி - கலங்கி. துயர் உழந்த - துன்புற்ற. அரவுக்கு அரசன் - காளிங்கன். வானோரானோர் சூழ் வனசக்கழல் - தேவர்கள் வணங்கும் தாமரைமலர்போன்ற (கண்ணபிரான்) அடி. புனைந்து - சூடி. கறை - இரத்தம். கான்யாறு - காட்டாறு. கடுக - விரைவாக. கடு - விடம். துளை நெட்டெயிறு - துளையையுடைய நீண்ட பல். தீகால் - நெருப்பைச் சிந்துகின்ற. முறுகி - மிக்கு. பவுரி கொண்டு - கூத்துவிகற்பங்களைச்செய்து.

42 பாதா ளம்படர் பூலோ கந்தொடர்
ஆகா சங்கடல் நீர்தீகால்
பாழா குங்கடை யூழாய் வந்தய
னூர்கா லந்தொகு நாளானல்
ஆதா ரந்தரு பாதா பங்கய
பாதா பஞ்சணை யேறாதே
ஆலே யுந்தழை மேலே கண்டுயில்
மாலே செஞ்சுடர் போகாமா
சூதா னம்படு மூதூர் சந்திபி
சாசா டுஞ்சுடு காடாயே
தோணா லந்துட னேயீ ரைந்தலை
தூளா குஞ்சிலை வீராவாழ்
பூதூ ரெம்பெரு மானா ரன்புறு
மாதா என்பவ தாலேலோ
பூமா னம்பிய கோமா னம்பிபி
ரானே புங்கவ தாலேலோ. (எ)

குறிப்புரை:—அயனூர்காலம் - பிரமன்வாழ்நாள். தொகும்நாள் - குறையுங்காலம். ஆல் ஏயும் தழை - ஆலிலை. சுடர் - சூரியன். போகா - மேற்செல்லாத. மா சூதானம் - மிக்க பாதுகாப்பு. மூதூர் - பழமையான ஊர்—இலங்கை. பூதூர் எம்பெருமானாரால் அன்பு செய்யப்பட்ட தாய் என்று சொல்லப்பட்டவனே என்க. பூமான் - பூமிதேவி. நம்பிய - விரும்பிய. புங்கவ - உயர்ந்தோனே! (42)

43 கரும்பு சாலி முறிந்து சாய
நடந்த மேதிகள் கால்பாய் மேயாதே
கயந்து ழாவியி லஞ்சி மேய
மலர்ந்த தாமரை பூணா வாணாள்வாய்

சாந்த வார்முலை கன்று வாய்பட
நின்று பால்சொரி மாறுவா றுலே
துளும்பு சேறுசெ ழும்பு நாற
முயங்கு மாரல்பு காரு டேறுதே
திரும்பி மீள மலங்கு தாவ
வரம்பில் வால்வளை சூலாய் மேலாயேர்
திரண்ட வாளைவெ குண்டு பாய
இரண்டு பாலும்வ ரால்பாய் சேல்பாய்நீர்
தரங்கம் வீசு கரண்ட மாடு
தடங்கொள் மாமுகில் தாலோ தாலேலோ
தழங்கு மேகம் வழங்கு நாட
குறுங்கை காவல தாலோ தாலேலோ. (அ)

குறிப்புரை:—சாலி - நெல். மேதி - எருமை. கால் பாய் - கால் பதித்து—நின்று. கயம் துழாவி - நீரைக் கலக்கி. இலஞ்சி - மடு. பூண்- பூண்டு. வாள் நாள் வாய் - ஒளி பொருந்திய விடியற்காலத்திலே. மாறு ஆறுலே - வற்றாத பாலாற்றினாலே. துளும்பு சேறு - குழைந்த சேற்றில். செழும்பு நாற - வளம் மிக. முயங்கும் ஆரல் - (அச்சேற்றிலே) கலந்த சிறுமீன். புகாருடு ஏறுதே - ஆற்றின் முகத்துவாரத்தில் ஏறுமல். சூல்- கரு. மேல் ஆய் ஏர் திரண்ட வாளை என்க. ஆய் ஏர் - மென்மையும் அழகும். ஆரல், மலங்கு, வாளை, வரால், சேல் என்பவை மீனினங்கள். தரங்கம் - அலை. கரண்டமாடு தடம் - கரண்டமாடு பொய்கை. தழங்கு - ஒலிக்கின்ற. (43)

44 பொருவில் பார்த்திபன் ஒருவன் மேற்பட
வாடா போடாவாய்
புதைசெய் போற்றிசெய் எனும டர்த்தசொல்
வாளா கேளாவாள்
வரிசை யாற்சொ லும் உரையின் மாட்சிமை
தேரா தோராதே
மடியில் நாக்கரி கருவி வீக்கிய
போதே தானோா

ஒருசொ லாக்கிலு மறைகு லோத்தமர்
ஓதிர் போதிரே
உரிய வார்த்தைகள் மொழிய நாக்கிலே
யானேன் நானேதான்
அரச கேட்டருள் எனமு னுள்சொன
தேவே தாலேலோ
அமரர்.ஏத்திட அமுதம் ஈத்தவ
தாலோ தாலேலோ. (கூ)

குறிப்புரை:—பொரு இல் - ஒப்பில்லாத. பார்த்திபன் - அரசன். வாடா, போடா, வாய்புதைசெய், போற்றிசெய் எனும் அடர்த்தசொல் வாளா கேளா என்க. வாய்புதைசெய் - வாய்பொத்து. போற்றிசெய்-துதி. அடர்த்தசொல் - கடுமொழி. வாளா கேளா - வீணே கேட்டு. ஓராது - நினையாமல். நாக்கரிகருவி - நாக்கையறுக்கும் கத்தி. இதனுள் வந்த வரலாறு புலப்படவில்லை. இத்தலபுராணம்வல்லார்வாய்க் கேட்டறியத்தகும். (44)

45 அரும்பிட்டமு தருந்திக்கரை மருங்கிற்றிடர்
சுமந்திட்டது போதா தீதார்கூ
றளந்திட்டன ரெனுங்கொற்கையர் பிரம்பிட்டுடல்
தழும்பிட்டவர் மாதா வேதாவே
இரும்பிற்கொரு பதம்பொற்குண மெழும்பிக்கதிர்
விடும்பொற்பன நாவா யேனவா
யிரங்குற்றமு மடங்கித்தவ நலம்பற்றிய
நிலம்பொத்திட வாள்வாய் தாண்மீதே
பருங்கச்சற மருங்கச்சிற நெருக்கிப்பணை
குரும்பைத்தன மானார் தேனார்வாய்
படுஞ்சொற்களை யிரங்கிக்கிளி பதங்கற்பன
தொடங்கித்திரி வாடா வாழ்வேகூர்
குருங்கைப்பதி வருங்கற்பக தடங்கைப்பொரு
விடங்கப்புயல் தாலோ தாலேலோ
குடந்தைத்திரு வனந்தைப்புன லரங்கத்திடை
துயின்றுற்றவ தாலோ தாலேலோ. (சு0)

குறிப்புரை:—அரும் பிட்டமுதருந்தி-அருமையான (வந்தி தந்த) பிட்டு என்னும் உணவை யுண்டு. அரும்பிட்டமுதருந்தி உடல் தழும்பிட்டவர் எனக் கூட்டுக. கரை மருங்கில் மண் சுமந்து திடர் இட்டது போதாது, ஈது ஆர் கூறு? ஆர் அளந்திட்டனர்? என்பது வையைக்கரையுடைப்படைப்பது கண்டுவந்த பாண்டியன்கூற்று. திடர்-மேடு. அளந்திட்டனர் ஆர்-அடைக்க வேண்டிய பகுதி இவ்வளவென்று அளந்துகொடுத்தவர் யார்? கொற்கையர் - கொற்கைத்துறையை யுடையவர்—பாண்டியர். பிரம்பிட்டு - பிரம்பினுல். தழும்புபட்டவராகிய சிவபிரானுக்குத் தாயானவனே! என்க. வேதாவே - பிரமனே. நாவாயேன், ஆ! ஆயிரங்குற்றமும் அடங்கித் தவநலம் பற்றிய நிலம் பொத்திட ஆள்வாய் - நாவின் வளம் இல்லாதேனுயினேன்; ஐயோ; (யான்செய்த) கணக்கற்ற பிழைகளினின்று மீண்டு தவப் பயனுன வீட்டுநிலத்தை உரிமையாக்கிக்கொள்ளும்படி ஆள்வாயாக. பருங் கச்சு அற - பெரிய ரவிக்கை அறும்படி. மருங்கு - இடை. அச்சு இற - உருவழியும்படி. பணை - பருத்த. வாடா - அழியாத. விடங்கப் புயல் - அழகிய மேகமே! குடந்தைத் துயின்றுற்றவ! திருவநந்தைத் துயின்றுற்றவ! புனலரங்கத்திடை துயின்றுற்றவ! என்க. (45)

ரு. தாலப்பருவம் முற்றிற்று.

ஆகக்கவி சரு.

அழகியநம்பி துணை.

சு. சப்பாணிப்பருவம்.

46 அலம்பாய்தொளி தோறுந் தடஞ்சால்வழி யேசென்
றருஞ்சூல்வளை யூருஞ் செக்கமலப்பூமொட்
டலர்ந்தூறுந றவுங் கருங்காவியின் வாய்விண்
டவிழ்ந்தூறிய தேனுங் கற்குடமிச்சாரற்
பலங்காமுற மேயுங் குரங்காடுப லாவின்
பழுங்கீறிய பாகின் பச்சுளை நெக்கூறு
பழந்தேறலு மாவின் கனிந்தோடிய சாறும்
பரந்தார்கலி போல்வந் தொக்கவு டைத்தேறிக்

கலிங்கூடெதிர் சாடும் பெரும்பான்மையின் மேவுங்
கரும்பார்குள ணூர்செம் பொற்கழ னிச்சார்பிற்
கயங்காவள மீனுங் கொழுஞ்சாலியின் மீனுங்
கடும்போர்விளை யாடும் பச்சைம ணிக்கோவைக்
குலம்போலுயர் பூகம் பசுங்காய்தரு நாடன்
குடக்கோவலர் பாலன் கொட்டுக சப்பாணி
கொழும்பாளைகள் பீறுஞ் செழும்பூவிரி நாறுங்
குருங்காபுரி மாயன் கொட்டுக சப்பாணி. (௧)

குறிப்புரை:—அலம் - கலப்பை. தொளி - சேறு. சால் - படைச்சால். சூல் வளை - கருக்கொண்ட சங்கு. செக்கமலம் - செந்தாமரை. நறா, தேன், தேறல் என்பன ஒருபொருட்கிளவிகள். காவி - நீலமலர். குடுமி - சிகரம். பலம் - பழம். பாகு இன்பச் சுளை - சருக்கரைபோல இன்பத்தை விளைக்கின்ற சுளை. நெக்கு - சிதைந்து. பலாவின்சுளை நெக்கு ஊறு பசுந்தேறல் எனக்கூட்டுக. ஆர்கலி - கடல். கலிங்கு - மதகு. குளன் - குளம். கழனி - வயல். கயங்கா - கெடாத. சாலி - நெல். நறாவும் தேனும் தேறலும் சாறும் உடைத்து, ஏறி, கலிங்கூடு சாடும் குளம், கரும்பார்குளம் என இயைக்க. குளம் ஆர் கயங்காவள மீனும் சாலியின் மீனும் கழனிச் சார்பிற் கடும்போர்விளையாடும் நாடன், பச்சைமணிக்கோவைக் குலம்போலுயர் பூகம் பசுங்காய்தரும் நாடன் என்க. பூகம் - கமுகு. பாலன் மாயன் சப்பாணிகொட்டுக என முடிக்க. கோவலர் - இடையர். (46)

47 கடந்தாயுல கேழுண் டுமிழ்ந்தாயுயிர் யாவுங்
கலந்தாய்முகை வீழுஞ் செக்கம லப்பொதிற்
காந்தாளிரு பாலுஞ் சிவந்தேவிட மார்பங்
கனிந்தூறிய வாயின் புத்தமு தச்சோனைத்
தடந்தாமரை யாரம் பெருந்தாவட நீளத்
தருக்தாரொன மானுங் கட்டழ கிட்டேரத்
தலங்காமுற வேகுண் டலங்காதொடு தோளின்
றயங்காவர வேர்பொன் சுட்டிநு தற்றாழப்
படர்ந்தாயிர மாய்வெம் படஞ்சீறிய சார்பின்
பயங்கூர்கவை நாவின் கட்செவி யுட்பாயல்
படிந்தோர்முகில் போன்முன் சிறந்தேகுண பாலின்
பதஞ்சேகர பாரம் பச்சிம திக்கர்க்

குடந்தாபுரி மீதுந் தடங்காவிரி யூடுங்
குழைந்தேதுயின் மாயன் கொட்டுக சப்பாணி
கொழும்பாளைகள் பீறுஞ் செழும்பூவிரி நாறுங்
குருங்காபுரி மாயன் கொட்டுக சப்பாணி. (௨)

குறிப்புரை:—எழுலகும் கடந்தாய், உண்டு உமிழ்ந்தாய் என்க. உம்மை செய்யுள்விகாரத்தாற் றொக்கது. செக்கமலப் போதிற் கரம் தாள் இருபாலும் - செந்தாமரை மலர்போன்ற கையும் காலும் இரண்டு பக்கமும். சோனை - நீர்த்துளிப்பெருக்கு. தலம் - பூமி; இது ஆகுபெயராய் அதிலுள்ளாரைச் சுட்டிநின்றது. வேர் - வியர்வை. சுட்டி - நெற்றியில் தொங்கவிடப்படும் ஒருவகையணி. நுதல் - நெற்றி. கவைநா - பிளவுபட்ட நா. கட்செவி - பாம்பு. பாயல் - படுக்கை. குணபால் - கீழ்த்திசை. பதம் - திருவடி. சேகரபாரம் - திருமுடி. பச்சிம திக்கு - மேற்றிசை. குடந்தாபுரி - திருக்குடந்தையென்னும் நகர். காவிரியூடும் - திருவரங்கத்திலும். மாயன்!, உலகேழும் கடந்தாய்! உலகேழும் உண்டு உமிழ்ந்தாய்! உயிர் யாவும் கலந்தாய்! (நீ) செந்தாமரைமலர்போன்ற திருக்கைகளும் திருத்தாள்களும் சிவக்க, மார்பின்கண் வாய்நீர் மாலையென்று சொல்லும்படி ஊற்றெடுத்து அழகிதாய்ப் பரவி வழிய, உலகத்தார் ஆசையுறும்படி காதிற் குண்டலம் தோளிலுராய்ந்து அசைய, சுட்டி நெற்றியிலே தொங்கியசையச் செங்கீரையாடியருள் என்று முற்றுவிக்க. ஆயிரம்பணுமகுடங்களையும் பிளந்தநாவினையுமுடைய ஆதிசேடனாகிய பாயலில் முகில்படிந்தாற்போலக் குடதிசை முடியும் குணதிசை அடியும் பொருந்தக் குடந்தையிலும் அரங்கத்தும் குழைந்துதுயில் மாயன் என்க. (47)

48 இரங்காதவ ளாலந் திரண்டோருரு வாய்வந்
தெழுந்தாள்பழி பாவம் பற்றுமனத்தாளிங்
கிருந்தாபதர் சாபங் கடிந்தாண்மறை யோரன்
பிழந்தாளெரி சூலந் தொட்டகொலைக்காலன்
கருங்கார்வரை போலும் பெருந்தாடகை மார்புங்
கடுங்கார்மர மேழும் பட்டுருவச்சீறுங்
கான்றாடணன் மூவெண் சிரங்கூடசு ரேசன்
கலங்காவதி காயன் பட்டிட நெட்டூரன்
சுரும்பார்நற வூனுண் டடங்காவயி றுளன்
றுயின்றானுண ராவன் கட்புல னற்சீலன்
றுளங்காவிமை யோர்தம் புரங்காவலன் வேழந்
துரந்தான்முதல் பாணம் பட்டுவி ழத்தாவுங்

குரங்கேபடை யாயன் றிலங்கா புரவாணன்
குலஞ்சூறைகொள் வீரன் கொட்டுக சப்பாணி
கொழும்பாளைகள் பீறுஞ் செழும்பூவிரி நாறுங்
குருங்காபுரி மாயன் கொட்டுக சப்பாணி. (அ)

குறிப்புரை:—ஆலம் - விடம்- தாபதர் சாபம் கடிந்தாள் - தவஞ் செய்வாருடைய வெகுண்டுகூறும் மொழிகளையும் மதியாதவள். சூலம் தொட்ட - சூலப்படையைத் தாங்கிய. இரங்காதவளும் விடம் ஒருவடி வெடுத்துவந்தாற்போல்பவளும் பழியும் பாவமும் பற்றிய மனத்தினளும் பெரிய தவசிரேட்டர்களுடைய சாபமொழிகளை மதியாதவளும் வேதியர்பாற் பற்றினையிழந்தவளும் சூலந்தாங்கிய கொலைத்தொழிலையுடைய காலன்போல் பவளும் ஆகிய தாடகையின் கரிய பெரிய மலைபோலும் மார்பும் மிக்க மேகந் தவழும் ஏழு மராமரங்களும் என்க. மூவெண் சிரம் கூடு அசுரேசன் - மூன் ருக எண்ணப்படுகிற தலைகளையுடைய அசுரர் தலைவன்—திரிசிரா. அதி காயன் - இராவணன்மகன். நெட்டூரன்..............துற்சீலன் - நெடிய (இலங்கை) நகரை வாசத்தானமாகக் கொண்டவனும் வண்டுகள்மொய்க் கின்ற கள்ளும் மாமிசமும்புசித்து நிறையாதவயிற்றையுடையவனும் உறங் கினால் விழியாத கண்களையும் தீயவொழுக்கத்தையும் உடையவனுமான கும்ப கருணன். துளங்கா - கலங்காத, இமையோர்தம்புரங்காவலன் - இந்திரன். வேழம் - யானை—அயிராவதம். இமையோர்தம் புரங்காவலன் வேழம் துரந்தான் - இந்திரசித்து. இலங்காபுரவாணன் - இராவணன். தாடகை மார்பும் (மரா) மரமேழும் உருவ, கரனும் தூடணனும் திரிசிரசும் அதிகாய னும் பட்டிட, கும்பகருணனனும் இந்திரசித்தும் பட்டுவிழ, இலங்காபுர வாணன்குலம் சூறைகொள் வீரன்! குருங்காபுரிமாயன்! சப்பாணிகொட்டுக என முற்றுவிக்க. (48)

49 மடந்தாழசு ரேசன் றொடுந்தூணகன் மார்பம்
பிளந்தாளரி யாய்வந் தெற்றி நகக்கோடால்
வகிர்ந்தாய்துள வோடுங் கலந்தே குடர்சூடும்
பெருந்தோளரி யேமன் சொற்கப தத்தீசன்
தடந்தாருவை வேரின் புறந்தாளொடு பாரின்
கொணர்ந்தாயதி தூரஞ் சட்சம யத்தோர்தஞ்
சடங்கோதிய நூலின் றொடர்ந்தோர்பிர மாணங்
கடந்தார்நர காளுங் கட்டளை யிட்டோனே

கடம்பாடவி நாகம் பெரும்பாதிரி பூகங்
கவிந்தேறிய சூழ்பொங் கர்ப்புடை நெட்டூசல்
கடிந்தாடியும் வாழ்பங் துகந்தாடியு மேழ்பொன்
கழங்காடியு மாகந் துய்க்குமி ளைப்பாகம்
குடைந்தாடியு நீர்செம் புலம்பாய்நதி சாய்குங்
குமஞ்சேறெழு நாடன் கொட்டுக சப்பாணி
கொழும்பாளைகள் பீறுஞ் செழும்பூவிரி நாறுங்
குருங்காபுரி மாயன் கொட்டுக சப்பாணி. (௯)

குறிப்புரை:—மடம் தாழ் அசுரேசன் - அறியாமையால் இழிந்த அசுரர் தலைவனாகிய இரணியன். அசுரேசன் தொடும் தூண் பிளந்து ஆளரியாய் வந்து (அவன்) மார்பம் எற்றி (அதை) நகக்கோடால் வகிர்ந்து அவன்குடர் ஆய்துளவோடும் கலந்தசூடும் பெருந்தோள் அரியே! என்க. ஆளரி - நரசிங்கம். நகக்கோடால் - வளைந்த நகங்களால். ஆய்துளவு - சிறந்த துழாய். மன் — நிலைத்த. சொற்கபதத்து ஈசன் - இந்திரன். தடம் - பெரிய. தாரு - பாரிஜாதவிருக்ஷம். பாரிஜாதவிருக்ஷத்தை வேரோடும் அடிமரத்தோடும் பாரில் அதிதூரம் கொணர்ந்தாய்! என்க. சட்சமயம் - அறுவகைச் சமயம். சடங்கு - கிரியை. சட்சமயத்தோர்தம் சடங்கு தொடர்ந்து ஓதிய நூலின் ஓர் பிரமாணம் (-கட்டளை) கடந்தார் நரகாளுங் கட்டளையிட்டோனே என்க. கடம்பு-மரவகையுள் ஒன்று. அடவி-காடு. கடம்பாடவி - கடம்பவனத்தின்கண். நாகம் - புன்னைமரம். பாதிரி - ஒருவகை மரம். பூகம் - குமுகு. ஏறிய - வளர்ந்த. கவிந்தேறிய பொங்கர், சூழ்பொங்கர் என்க. பொங்கர்ப்புடை — சோலையுள். நெட்டூசல் கடிந்தாடியும் நீண்டவூசலை யுதைந்தாடியும். கழங்கு - அம்மனை. மாகம் துய்க்கும் இளைப்பு - மேலிடத்தார் (தேவமகளிர்) அநுபவித்தமையால் விளைந்த இளைப்பினால். ஆகம் உடல்; மார்புமாம். நீர் - நீரினல். செம்புலம் பாய் நதி - நல்ல நிலத்தே ஒழுகுகிற ஆற்றின்கண். சாய் - அழகிய. குங்குமம் சேறெழும் நாடு என்க. அரியே! தாருவைக் கொணர்ந்தாய்! நூலின் ஓர் பிரமாணங் கடந்தார் நரகாளுங் கட்டளையிட்டோனே! நதி குங்குமம் சேறெழுநாடன்! குருங்காபுரிமாயன்! சப்பாணிகொட்டுக! சப்பாணிகொட்டுக! என முடிவுகொள்க. (49)

50 அடங்கா மதக்கவுட் டருவினால் வாய்ப்பொருப்
பயிராபதப் பகடுநீ
டலைகடற் புக்கொளித் தொழியாம லைந்தரு
வடிக்கெடா தமுதவைப்பிற்

குடங்காவ லற்றுப் புலான்முடை கமழ்க்குங்
கொடுந்தொழிற் பகுவாய்முழைக்
கொள்ளைகொள் ளாதர வரம்பைமட மங்கையர்
குலத்தியல்பு குன்றுமல்வெம்
படங்கால் குவித்துச் சினங்குறைந் துறைவிடப்
பாந்தளிற் றெய்வேந்திரன்
படுசிறைச் சாலையில் வருந்தா திராவணன்
பஃறலைக் குன்றிடிப்பத்
தடங்கால் குனிக்குங் கொடுங்கார் முகக்கொண்டல்
சப்பாணி கொட்டியருளே
தழைக்குந் தமிழ்த்தென் குருங்கா புரித்தலைவ
சப்பாணி கொட்டியருளே. (ரு)

குறிப்புரை:—கவுட்டு அடங்கா மத அருவி நால்வாய்ப் பொருப் பயிராபதப்பகடு - கன்னத்தின்கண் உள்ளதாகிய குறையாத மதஅருவியையும் தொங்குகின்ற வாயினையும் உடைய மலையாகிய அயிராபதப்பகடு. பகடு-ஆண் யானை. ஐந்தரு - பஞ்சதருக்களும். அமுதவைப்பிற் குடம் - அமுது வைக்கப்பட்ட கலசத்தை. புலான்முடை கமழ்க்கும் .... கொள்ளை கொள்ளாது - புலானாற்றம்வீசுகின்ற குகைபோன்ற பிளந்தவாயினையும் கொடியதொழிலினையும் உடைய அரக்கர்கூட்டம் உண்ணாமல். கமழ்க்கும் - கமழ்கின்ற. முழை - குகை. பகுவாய் - பிளந்த வாய். கொள்ளை-மிகுதி; இங்கே அரக்கர்கூட்டத்தைச் சுட்டிநின்றது. அரவ ரம்பை மடமங்கையர்- சிலம்பணிந்த அரம்பையென்று வழங்கப்படுகிற இளம்பெண்களாகிய தேவ மாதர். வெம் படம் கால் குவித்து — கொடிய படத்தையும் காலையும் ஒடுக்கி. பாந்தளில்- பாம்பைப்போல. பஃறலைக்குன்று - பலதலைகளாகிய மலைகள். அயிராவதம் கடலில் மறைந்தொழியாமலும் பஞ்சதருக்களும் வேரறாமலும் தேவலோகத்துள்ள அமுதகலசம் அரக்கர்களால் கொள்ளப்படாமலும் தேவமாதர் குலத்தியல்புகுன்றாமலும் இந்திரன் சிறைச்சாலையில் வருந்தாமலும் (வாழ்வுறும்படி) இராவணனுடைய பலவாகிய தலைமலைகளை இடிக்கும் பொருட்டு வளைக்கப்பட்ட கார்முகத்தையுடைய கொண்டலே! குருங்காபுரித் தலைவ! சப்பாணிகொட்டியருள்! சப்பாணிகொட்டியருள் என முடிவுகொள்க.

51 தொன்னகர்ப் புவனங்க ளளவைகாண் டற்கயன்
றாக்கிய முழக்கோலெனச்
சூழுல களந்தும்பர் சென்றகா ணின்றிடஞ்
சோதிக்க விடுதூதெனப்

பொன்னகர்க் கிரணக் கதிர்க்குப்பை கிழ்தூங்கு
புனிதவிழு தின்றதென்னப்
புத்தேளி ரடிதொழ விறங்குகண் ணேணியைப்
போன்றிரவி யுச்சிபூப்பப்
பன்னகப் பருமணிக் கவிகையுஞ் சொரிசுடர்ப்
பைம்பொனின் காம்புமேய்ப்பப்
பரியறைப் பொற்றூண் முகத்திட்ட குலிகவண்
பரிசைவட் டங்கடுப்பச்
சன்னதிக் கருடக் கொடிக்கம்ப மோங்குமுகில்
சப்பாணி கொட்டியருளே
தழைக்குந் தமிழ்த்தென் குருங்கா புரித்தலைவ
சப்பாணி கொட்டியருளே. (௬)

குறிப்புரை:—கருடக்கொடிக்கம்பம், புவனங்களை அளத்தற்குப் பிரமன் எடுத்த முழக்கோல் போலவும், திருமால் உலகளந்த ஞான்று மேலுலகளத்தற்குச் சென்ற தாள் நின்ற இடத்தை ஆய்ந்தறிதற்குவிடுத்த தூதைப் போலவும், அமராவதியின் கிரணத்தொகுதி ஈன்ற கீழேதொங்குகின்ற விழுதுபோலவும், தேவர்கள் அழகியநம்பியை வணங்குதற்கு இறங்கிவரும் கண்ணேணியைப்போன்றும், பருத்த அடிப்பக்கத்தையுடைய பொற்றூண் சுடர்சொரி பைம்பொனின் காம்புபோலவும், பொற்றூண்முகத்திட்ட குலிக வண் பரிசைவட்டம் இரவி உச்சிப்பூப்பப் பன்னகப் பருமணிக்கவிகைகடுப்பவும் ஓங்கும் சன்னதிமுகில்! குருங்காபுரித்தலைவ! சப்பாணிகொட்டியருள் என முடிக்க. உம்பர் - மேலுலகு. தாள் - அடி. நின்ற இடம் என்பது நின்றிடம் என்றுயது விகாரம். குப்பை - மிகுதி. புத்தேளிர் - தேவர். கண்ணேணி - (இடையிடை வெளியுடையதாகப் பழுதுகள் அமைக்கப்பட்ட (மூங்கில்) ஏணி. இரவி - சூரியன். பூப்ப - தோன்ற. பன்னகப்பருமணி - நாகரத்தினம். கவிகை - குடை. குலிகம் - சாதிலிங்கம், பரிசை-கேடயம்.

52 மடைப்பாணி வெள்ளந் திறந்துமிழ்ந் திருகரை
மருங்குபொன் திரைகொழிக்கும்
வைகுந்த வளநாடன் வண்ணமழ கியநம்பி
வாழ்வித்த நம்பியென்னத்

தொடைப்பாணி யின்னிசை யிழற்றுமிழி குலமடத்
துடியிடைப் பிடிநடைக்குச்
சுடர்மணிக் கனகபூ டணமுன் கொடுத்தருள்
சுரக்குந் துழாய்க்கொண்டலே
அடைப்பாணி யைவகை நிலத்திற்கும் வகைபெற
வமைத்தபொற் றேர்விசயனுக்
கருள்பெருகு வலவனே யுமைகவுரி யிடவனும்
அமுதவெண் டிங்கண்மாலைச்
சடைப்பாணி முக்கட் புராரிகண் களிதரச்
சப்பாணி கொட்டியருளே
தழைக்குந் தமிழ்த்தென் குருங்கா புரித்தலைவ
சப்பாணி கொட்டியருளே. (எ)

குறிப்புரை:— பாணிவெள்ளம் - நீர்ப்பெருக்கு. பாணிவெள்ளம் மடை திறந்துமிழ்ந்து திரை (யால்) இருகரைமருங்கு பொன்கொழிக்கும் வைகுந்த வளநாடன் என்க. வைகுந்தவளநாடன் வண்ணமழகியநம்பி வாழ்வித்த நம்பியென்று பண்ணொடுகூடிய பாடலை இன்னிசையாற்பாடிய இழிகுலத்திற் பிறந்தவளும் துடிபோலும் இடையும் பிடிபோலும் நடையும் வாய்ந்தவளும் ஆகிய ஒருமகட்கு ஒளிவிடுகின்ற மணிகளழுத்திய பொன்னணிகளை முன் வழங்கியருள்செய்த துழாய்மாலையணிந்த மேகம்போல்பவனே! விசயனுக்கு வலவனே! புராரி களிக்கும்படி சப்பாணிகொட்டியருள் என முடிக்க. கனக பூஷணம் - பொன்னணி. ஐவகைநிலத்துக்கும் வகைபெற அமைத்த அடைப்பு ஆணிப் பொற்றேர்விசயன் என்க. ஐவகைநிலம் போரிற் பகைவர்மேலே கருவிகளைத் தொடுக்கும் நிலமும், பகைவர் தொடுத்த கருவிகளை விலக்கும் நிலமும், பகைமேற்செல்லும்நிலமும், தம்மைப்பாதுகாத்துக்கொள்ளும் நிலமும், குற்றங்கடிந்து போர்செய்யும் நிலமும் ஆம். அடைப்பு - பாதுகாப்பு. ஆணிப்பொற்றேர் - சிறந்த அழகிய தேர். ஆணிப்பொன்னால் அமைந்த தேர் எனினும் ஆம். வலவன் - சாரதி. உமை கவுரி இடவன் - உமாதேவியாகிய கௌரியை இடப்பாகத்தேகொண்டவன்—சிவபெருமான். சடைப்பாணி முக்கட் புராரி - சடையின்கண் (கங்கை) நீரையுடையவனும் மூன்று கண்ணையுடையவனும் ஆன திரிபுரங்களை யெரித்த சிவபெருமான். (52)

53 *... ....
... ...
... ...
... ...
... ...
... ...
... ...
... ...
... ...
... ...
... ...
... ...
... ...
... ...
... ...
... ... (அ)

குறிப்புரை:—... ... ...
... ...
... ... (53)

54 அலம்பொரு கருங்தொளி துளும்புபழ னந்தனி
லயற்கேணி யிற்றலையினீ
டகன்பணை வரம்பினின் மருங்குயர் குறம்பினி
லலைப்பாய் சுருட்டுபுனன்மேன்
மலர்ந்தக மலங்களி னெகிழ்ந்தகுமு தந்தனின்
மலர்க்காவி யிற்குலைபெரு
வணங்கிய வரம்பையி லருங்கமுகி னும்பரின்
மடற்றாழை யுச்சிமுகைமேல்
இலஞ்சிநற வங்குரவு சண்பக மலர்ந்தபொழி
லிற்சானு மெக்கர்மணன்மேல்
இடங்கருக ளும்படு கிடங்கினி னெடுந்துறை
யினிற்றோணி யுட்புடையினார்

*கிடைத்த பிரதிகளில் 53-ஆம் பாட்டு எழுதப்படவில்லை. வேறு பிரதிகளிலே இருந்தால் எழுதிக்கொள்ளும்படி இடம் விடப்பட்டது.

சலஞ்சலம் வலம்புரி தழங்கிய குருங்கைமுகில்
சப்பாணி கொட்டியருளே
தயங்குதிரு மஞ்சன முயங்குகுழ கன்புனித
சப்பாணி கொட்டியருளே. (க)

குறிப்புரை:—அலம்பொரு கருங்தொளி தளும்பு பழனம் - கலப்பையா லுழப்பட்ட கரிய சேறு கலங்கிய வயல். கேணி-சிறுகுளம்; கிணறுமாம். துலை-இறைக்கவேண்டிய நீர் நிறைந்துநிற்குமிடம். பணைவரம்பு - வயல் வரப்பு. குறும்பு - ஊர். புனல் - நீர். வணங்கிய - வளைந்த. அரம்பை- வாழை. கமுகினும்பர் - கமுகின் உச்சி. முகை - மொட்டு. இலஞ்சி - மகிழ். நறவம் - ஒருவகைமரம். குரவு - ஒருவகைமரம். இடங்கர் - முதலை. உக ளும் - சஞ்சரிக்கின்ற. கிடங்கு - அகழி. சலஞ்சலம் வலம்புரி என்பவை சங்கினங்கள். தழங்கிய - ஒலித்த. பழனத்தில் கேணியில் துலையில் வரம்பில் குறும்பில் கமலங்களில் குமுதங்களில் காவியில் அரம்பையில் கமுகினும்பரில் தாழைமுகைமேல் பொழிலில் மணல்மேல் கிடங்கினில் துறையினில் தோணி யுட்புடையின் ஊர் சலஞ்சலமும் வலம்புரியும் தழங்கிய குருங்கை என்க.

55 பருங்கற்கிரி மருங்கிற்கவி யக்குடையிட்டோனே
பதுங்கிப்பகை யொதுங்கத்திகி ரிப்படைவிட்டோனே
கருங்கற்பெரு வரம்பெற்றிடு பொற்கழல்வைத்தோனே
கரும்பிற்சுவை கயங்கத்தகு முத்தியளிப்போனே
அருங்கற்பகம் வழங்கப்புழு திப்புவிநட்டோனே
அரங்கத்திடை கிடந்தத்திகி ரித்தலைநிற்போனே
குருங்கைப்புயல் குடங்கைத்துணை கொட்டுகசப்பாணி
குதம்பைக்குழை குலுங்கத்தனி கொட்டுகசப்பாணி. ()

குறிப்புரை:—பருங்கற்கிரி என்றது கோவர்த்தனத்தை. திகிரிப்படை - சக்கராயுதம். கருங்கல் என்றது கரிய கல்வடிவிற் கிடந்த அகலிகையை யுணர்த்திநின்றது. கற்பகம் என்றது இங்கே பாரிஜாதத்தை. அத்திகிரித் தலை - அத்திகிரியில். குதம்பை - காதணி. (55)

௪. சப்பாணிப்பருவம் முற்றிற்று.

ஆகக்கவி ருரு.

அழகியநம்பி துணை.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் விற்கப்பெறும் புத்தகங்கள்.

I. சங்கப்பிரசுரம்.

		ரூ.	அ.	ப.
1.	ஞானாமிர்த மூலமும் உரையும்	1	0	0
2.	சைவமஞ்சரி	1	8	0
4.	வைத்தியசாரசங்கிரகம்	5	0	0
5,	பன்னூற்றிரட்டு	3	0	0
8.	தமிழ்ச்சொல்லகராதி மூன்றாம்பாகம்	5	0	0
10.	தொல்காப்பியம் செய்யுளியல் (நச். உரை)	1	12	0
11.	திருவருணைக்கலம்பகம்	0	6	0
13.	கலைசைச்சிலேடைவெண்பா	0	6	0
15.	திருவாரூர் நான்மணிமாலை	0	4	0
16.	ஸ்ரீகிருஷ்ணசரித்திரவிமர்சம்	1	4	0
17.	பன்னூற்றிரட்டு (செலக்ஷன்)	0	4	0

II. செந்தமிழ்ப்பிரசுரம்.

		ரூ.	அ.	ப.
1.	ஐந்திணையைம்பது (உரையுடன்)	0	4	0
2.	சிறுநூல் (5) இனியதுநாற்பது (உரை)	0	3	0
4.	புலவராற்றுப்படை	0	3	0
7.	திருநூற்றந்தாதி (உரையுடன்)	0	6	0
8.	திணைமாலைநூற்றைம்பது (உரையுடன்)	0	8	0
9.	அநுமானவிளக்கம்	0	10	0
10.	அட்டாங்கயோகக்குறள்	0	2	0
12.	பன்னிருபாட்டியல்	0	12	0
13.	நான்மணிக்கடிகை (பழைய உரை)	0	4	0
14.	மூத்தொள்ளாயிரச்செய்யுட்கள்	0	3	0
16.	திருவாரூருலா	0	8	0
17.	சுகசந்தர்சனதீபிகை	0	12	0
18.	இயற்கைப்பொருட்பாடம்	0	4	0
19.	தேவையுலா	0	3	0
21.	சிதம்பரப்பாட்டியல் (உரையுடன்)	0	8	0
22,	திருக்கலம்பகமூலமும் உரையும்	1	0	0
23.	விக்கிரமசோழனுலா	0	8	0
24.	குருமொழிவினாவிடை	0	1	0
25.	கேசவப்பெருமான் இரட்டைமணிமாலை	0	2	0
26.	திருத்தணிகைத்திருவிருத்தம்	0	1	0
27.	மதுரைத்திருப்பணிமாலை	0	8	0
30.	ஞானாமிர்தக்கட்டளை	0	3	0
32.	மநீஷாபஞ்சகம்	0	8	0
36.	உவமானசங்கிரகம்	0	1	0
37.	மாறனலங்காரம் மூலமும் உரையும்	4	8	0
[illegible]	திருப்புல்லாணிமாலை	0	2	0

40.	திருமாலிருஞ்சோலைமலை அழகர்பிள்ளைத்தமிழ் ...	0	8	0
41.	பொருட்டொகைநிகண்டு	0	6	0
42.	அகராதிநிகண்டு	0	12	0
43.	மேகவிடுதூது	0	2	0
44.	திருக்குற்றாலமாலை	0	2	0
45.	தண்டலையார்சதகம்	0	4	0
46.	இராமோதந்தம்	0	3	0
47.	பழமொழிமூலமும் பழைய உரையும் (2-வது 100) ...	1	0	0
48.	சேதுநாடும் தமிழும்	0	6	0
52.	கூடற்புராணம்	0	10	0
53.	திருவள்ளுவர் (ஆங்கிலம்)	0	6	0
54.	அரும்பொருள்விளக்கநிகண்டு...	1	4	0
55.	மாறனகப்பொருளும் திருப்பதிக்கோவையும் ...	0	12	0
56.	பாப்பாவினம்	0	10	0
57.	மதுரைமும்மணிக்கோவை	0	5	0
58.	பழனிப் பிள்ளைத்தமிழ்	0	3	0
59.	கடம்பர்கோயில் உலா	0	6	0
60.	சங்கரநயினார்கோயில் அந்தாதி	0	6	0
61.	கலைசைக்கோவை	0	12	0
62.	பெருந்தொகை	5	0	0
63.	சூடிக்கொடுத்தநாய்ச்சியார்தோத்திரப்பாமாலை ..	0	5	0
64.	சிராமலைக்கோவை	0	12	0
65.	மத்யமவியாயோகம்	0	2	0
67.	அமிர்தரஞ்ஜநி	0	2	0
69.	பொன்வண்ணத்தந்தாதி மூலமும் உரையும் ...	0	8	0
70.	திருச்சிறுபுலியூருலா	0	12	0
71.	துணைத்தலைவர் நினைவுமலர்	0	10	0

குறிப்பு:-1. கைவசம் இல்லாத சங்கப்பிரசுரங்களும் செந்தமிழ்ப்பிரசுரங்களும் இதில் குறிக்கப்படவில்லை. மறுபடி அச்சிட்டு வெளியானதும் இப்பட்டியலில் சேர்க்கப்படும்.

2. சங்கத்தினின்று மாதம் ஒருமுறை அரிய பெரிய விஷயங்களைக் கொண்டுவெளியாகிவரும் இச்“ செந்தமிழ் ”ப்பத்திரிகைக்கு வருஷச்சந்தா ரூ 4. தனிப்பிரதியின் கிரயம் அணா 8. வெளிநாடுகளுக்கு வருஷச்சந்தா ரூ 4-8-0. இதுவரை 46 தொகுதிகள் பூர்த்தியாயிருக்கின்றன. இவற்றுள் 1, 2, 3, 6, 7, 8, 9, 10, 14, 16-ம் தொகுதிகள் கைவசமில்லை. 12 மாதப்பகுதிகள் உள்ள பைண்டு செய்யாத தொகுதி 1-க்கு ரூ 4—0—0 வீதம் விற்கப்பெறும். வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

3. சங்கப்பதிப்புப்புத்தகங்களை ஒரு ரூபாய்க்கும் அதற்கு மேற்பட்டும் வாங்குவோர்கட்கு ரூபா ஒன்றுக்கு அரையணா வீதம் கமிஷன் தள்ளிக்கொடுக்கப்படும்.

S. சிவஸ்வாமி, மானேஜர்.